கிளை நூலகம்

விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 10 சனிக்கிழமை (26.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 250

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## இரும்பு என கருதி விபரீதம்; மர்மப் பொருள் வெடிப்பு!

### தாய் படுகாயம்; மகள் காயம்

(பரந்தன்)

பளை முகமாலை வடக்கில் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்ற மர்மப் பொருள் வெடிப்புச் சம்பவத்தில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மேலும் அவரது மகளும் இதன் போது சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இதில் அதே பகுதியினைச்



சேர்ந்த ராமகிருஷ்ணன் ரஞ்சிதமலர் (வயது48) மற்றும் அவரது மகள் 23 ☛

## நம்பிக்கையில்லாப் பிரேரணை நகைப்புக்குரியதாகியுள்ளது - ரவி

(கொழும்பு)

நம்பிக்கையில்லா பிரேரணை என்பதை கூட்டு எதிர்கட்சியினர் நகைப்பிற்குரிய நகைச்சுவையாக மாற்றியுள்ளதாக பிணைமுறி மோசடி குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகி தாமாக பதவி விலகிய முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறியுள்ளார்.

அரசாங்க தகவல் திணை



க்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட ரவி கருணாநாயக்க,

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்ப்பித்துள்ளதன் மூலம் கூட்டு எதிர்க்கட்சியின் வங்குரோந்து நிலைமை வெளிப்பட்டுள்ளதாக விமர்சித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட முன்னாள் வெளிவிவகார 23 ☛

## மஹா தேரர்குழு யாழ். விஜயம்



(யாழ்ப்பாணம்)

சாமோபாலி மஹா நிக்காய அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் 24 ☛

### குற்றச் செயல்களை

## ஒரு வருடத்துக்குள் கட்டுப்படுத்துவேன்



23 ☛

## வாகன விபத்து; ஒருவர் மரணம்

(கனகராயன்குளம்)

வவுனியாவில் துவிச்சக்கரவண்டி- மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் நேற்று மதியம் 24 ☛

## சைட்டம் குறித்து திங்கள் முடிவு

(கொழும்பு)

சைட்டம் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு இடையில் நேற்று பிற்பகல் பேச்சுவார் 23 ☛

### போர்க்குற்ற விசாரணை நடத்த

# காலம் இன்னும் கனியவில்லை!

### இப்படிக் கூறுகிறார் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

இராணுவம் உட்பட அரச படையினருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றங்கள் மற்றும் மோசமான மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கான நீதிமன்றப் பொறிமுறை குறித்து கதைப்பதற்கு இன்னமும் காலம் கனியவில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம்...)



### உள்ளூராட்சி சபை தேர்தல்

## பெண்களுக்கு 25 சதவீத இட ஒதுக்கீடு உறுதி

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள உள்ளூராட்சி சபை தேர்தல் சட்ட திருத்தத்தில் பெண்களுக்கு 25 சதவீத இட ஒதுக்கீடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வட்டாரம் மற்றும் விகிதாசாரம் என கலப்பு முறையில் உறுப்பினர்களை தெரிவு செய்யும் வகையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா 23 ☛

## 20-ம் திருத்தச்சட்ட மூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்ட மூலம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தின் போது ஏற்பட்ட அமளிதுமளிக்கு மத்தியில் சபை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் கூடிய பொது இந்த சட்ட மூலத்துக்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

குறித்த சட்ட மூலத்துக்கு ஆதரவாக 120 வாக்குகள் கிடைத்துள்ள அதேவேளை, 44 பேர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

அத்துடன் நாடாளுமன்றத்துக்கு சமுகமளித் 23 ☛

## வாள்வெட்டு; சம்பவம் தொடர்பில் அறுவர் கைது

(குருமன்காடு)

குருமன்காட்டில் குடும்பஸ்தர் மீது மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா காளிகோவில் வீதியில் கடந்த 21-ம் திகதி இரவு 11 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட வாள் வெட்டுத் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் வவுனி 23 ☛

## காணாமல் ஆக்கப்பட்டோருக்காக மாபெரும் எழுச்சிப் போராட்டம்

### 30-ம் திகதி தாயகம் எங்கும் முன்னெடுக்க அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் தினமான எதிர்வரும் 30-ம் திகதி இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்ட 20ஆயிரம் தமிழ் மக்களிற்காக மாபெரும் எழுச்சி போராட்டத்தை நடத்துவதற்கு நாட்டிலும் புலம்பெயர் தேசங்களிலும் உள்ள அனைவரும் கட்சி பேதங்களை கடந்து ஒன்றிணைய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ள வட மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், இப் போராட்டத்திற்கு எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் இதனை வெற்றிகரமாக நிகழ்த்தியே தீருவோம் எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் 23 ☛

### கடமையில் இடையூறு; அடாவடி

## உதவி பொலிஸ் அத்தியட்சகர் மீது சக பொலிஸார் முறைப்பாடு!

(யாழ்ப்பாணம்)

கடமை செய்வதற்கு தொடர்ச்சியான முறையில் இடையூறு விளைவிப்பதாக தெரிவித்து ஊர்காவற்றுறை உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு எதிராக ஊர்காவற்றுறை தலைமை பொலிஸ் பரிசோதகரால் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரிடம் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேசத்துக்குட்பட்ட மூன்று பொலிஸ் பிரிவுகளிலும் பொறுப்பாகவுள்ள உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், அப்பகுதியில் இடம் பெறும் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 23 ☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வழி மறித்து தாக்குதல்

## வாகனங்களுடன் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலி சந்தியில் வீதியால் சென்றவர்களை வழிமறித்து தாக்குதல் மேற்கொண்ட சந்தேக நபர்கள் நால்வரை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்ததோடு தாக்குதலுக்காக பயன்படுத்திய வாகனங்களையும் பறிமுதல் செய்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

அச்சுவேலி சந்தியில் கடந்த 21ஆம் திகதி வீதியால் சென்றவர்களை வழி மறித்து தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதற்கமைய சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்களை பொலிஸார் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்ததோடு தாக்குதலுக்கு பயன்படுத்திய ஆட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள்களையும் பறிமுதல் செய்து நேற்றையதினம் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் சந்தேக நபர்களை ஆஜர் படுத்தியிருந்தனர்.

மேலும் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களை கைது செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.கே.திவில்வெல தெரிவித்துள்ளார். (செ-10,104)

# மத்திய வங்கி முறிமோசடி விரைவில் பலர் மீது வழக்கு

## சுதந்திரக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை முறி மோசடி விவகாரம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக இன்னும் சில நாட்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

இந்த மோசடி விவகாரம் கடந்த காலங்களில் நீதிமன்றம் வரை செல்லாதிருப்பதற்கு ஏதோவொரு சக்தி அதற்கு தடைகளை ஏற்படுத்தியதாகவே நினைப்பதாக சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும், சமூக நலன்புரி அமைச்சருமான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் அதற்காக விசாரணை நடத்த அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தமது விசாரணைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில் பேர்பச்சுவல் டிரசரீஸ் நிறுவன உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ், முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட பலரும் இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ளதாக ஆணைக்குழு முன்பாக அளிக்கப்பட்ட வாக்குமூலம் ஊடாக புலப்படுகின்றது. அத்துடன் ஆணைக்குழு விசாரணையின் போது வெளியான கையடக்கத் தொலைபேசி ஊடாக குறுந் தகவலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சம்பந்தப்பட்டுள்ளதாகவும். அவருக்கெதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் ஒன்றிணைந்த எதிரணி வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையில் கொழும்பில் நேற்றையதினம். நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட சமூக நலன்புரி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க இந்த விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிட்டார்.

அரசாங்கம் களவு செய்து கையும் மெய்யுமாக பிடிபட்டுக்கொண்டது. மத்திய வங்கி மோசடி அரசாங்கத்திற்கு பாரிய பிரச்சினையாகும். சுமார் 80 வழக்குகள் வரை காணப்படுகின்றன. இவை நீதிமன்றம் வரை கொண்டுசெல்ல முடியாதவாறு ஏதோ வொரு சக்தியினால் தடைகள் ஏற்படுத்தப்பட்டன என்றே நாங்கள் நினைக்கின்றோம். எனினும் இந்த வழக்குகள் எதிர்காலத்தில் விசாரிக்கப்படும். அதனால் ஊழல், குற்றங்கள், மோசடிகள் தொடர்பில் சட்டத்திற்கு முன்பாக சம்பந்தப்பட்டவர்கள் சாட்சியமளிக்க நேரிடும். நாட்டின் ஜனநாயகம் மற்றும் மக்களின் சுதந்திரத்தை உறுதிசெய்ய எதிர்காலத்திலாவது அப்படியான சூழ்நிலைக்குத் தள்ளப்படுவதை நிறுத்த நீதிமன்ற நடவடிக்கைக்குச் செல்வதே சிறந்ததாகும். இந்நிலையில் நீதிமன்ற நடவடிக்கைக்கு விரைவில் செல்வார்கள் என்றே நான் நினைக்கின்றேன். வழக்குகளும் விரைவில் தாக்கல் செய்யப்படும் என்றார் எஸ்.பி.திஸாநாயக்க. (செ-11)

# கணேசானந்த மகாதேவ சுவாமிகள் நேற்றையதினம் சமாதி பிரதிஷ்டை



நேற்று முன்தினம் சமாதி நிலை அடைந்த தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகளின் சமாதி பிரதிஷ்டை நிகழ்வு நேற்று பிற்பகல் 12.22 மணிக்கு ஜெயந்தி நகரில் உள்ள மகாதேவா ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

இதில் சைவ சமய குருமுதல்வர்கள் உள்ளிட்ட ஆன்மிக பெரியோர் மற்றும் அடியவர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கம்பவாரிதி ஜெயராஜிற்கு 'சைவ சித்தாந்தக் கலாநிதி'

## பட்டம் வழங்குகிறது தருமை ஆதீனம்

தருமை ஆதீனத்தின் இவ்வாண்டு ஆவணி மூலத்திருநாள் விழாவில் கம்ப் வாரிதி இ. ஜெயராஜ் அவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் அவர்களால் சைவசித்தாந்தக் கலாநிதி எனும் பட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் 31ஆம் திகதி வழங்கப்படுகிறது.



தருமை ஆதீனத்தால் ஆண்டு தோறும் வழங்கப்படும் இப்பட்டத்தினை பெருந்தமிழறிஞர்களான ஆர்.பி.சேதுப்பிள்ளை, கி.வா. ஜெகந்நாதன், ஏ.சிறீனிவாசராகவன், என். ஆர். முருகவேள், அ.ச.ஞானசம்பந்தன், க.வஜ்சிரவேல்முதலியார், க.வெள்ளைவாரணர், டாக்டர் வை.ரட்ணசபாபதி, திருமதி சௌந்திரா கைலாசம், டாக்டர் ஔவை நடராஜன் முதலியோர் பெற்றுள்ளனர்.

ஏற்கெனவே திருவாவடுதுறை ஆதீனம் 2015ஆம் ஆண்டு கம்பவாரிதி அவர்களுக்கு சிவஞானக்கலாநிதி என்னும் பட்டத்தினை வழங்கி கௌரவித்தது இவ்வாண்டின் தொடக்கத்தில் கம்பவாரிதி தமிழ் நாடு அரசின் கம்பர் விருதினையும் ஓர் இலட்சம் ரூபாய் பொற்கிழியையும் பெற்றுக்கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (செ)

# ஆதரவற்ற பல குழந்தைகளுக்கு நிழலாக விளங்கிய பெருமகன்

## கணேசானந்த சுவாமி சமாதி குறித்து ஆறு.திருமுருகன் ஆழ்ந்த கவலை

கிளிநொச்சி ஜெயந்திநகரில் உள்ள மகாதேவா ஆச்சிரமத்தின் குரு பீடாதிபதியாக நீண்டகாலம் ஆன்மிகப் பணியாற்றிய ஸ்ரீமத் கணேசானந்த சுவாமிகள் மகாசமாதி அடைந்த செய்தி குறித்து தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார்.

தவத்திருயோகர் சுவாமிகளின் வேண்டுதலுக்கமைய இணுவிலைச் சேர் ந்தவடிவேல் சுவாமிகள் கிளிநொச்சி பகுதி யில் குடியேறிய மக்களுக்கு ஆன்மிக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஜெயந்தி நகரில் குடில் அமைத்து தொண்டாற்றினார். அக் குடிலே மகாதேவா ஆச்சிரமம் என்ற நாமத்தோடு இன்று பெருவிருட்சமாக வளர்ச்சி பெற்றுள்ளது. வடிவேல் சுவாமிகளால் உருவாக்கப்பட்ட மகாதேவா ஆச்சிரமத்தை அவரது சமாதிக்குப் பின் நீண்ட காலம் நிர்வகித்த பெருமை இன்று சமாதி அடைந்துள்ள ஸ்ரீமத்கணேசானந்த சுவாமிகளைச் சாரும். போர்ச் சூழலு க்கு மத்தியில் கிளிநொச்சி மாவட்டத்தில் சைவசமயத்தின் காவலராக இவர் ஆற்றிய தொண்டு மறக்க முடியாது. ஆதரவற்ற பல குழந்தைகளுக்கு நிழலாக விளங்கிய இப் பெருமகனாரின் பிரிவு மிகுந்த வேதனை தரும் செய்தியாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பலருக்கு சமய தீட்சை வழங்கி நற்கருத்துக்களை எடுத்துரைத்து வழிகாட்டியாகத் திகழ்ந்த இப் பெரியாரின் இடத்தை இன்றுநிரப்புவ தற்குயாரும் இல்லை. தள்ளாடும் வயதிலும் இறுதிவரை பணியாற்றிய பெரியாருக்கு எமது இதய அஞ்சலியினை தெரிவித்துக் கொள்கிறோம் என அவர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## சோமசுந்தரம் விக்னேஸ்வரன்



தோற்றம்-1944.11.25

மறைவு-2014.08.30

ஆண்டுகள் மூன்றானாலும்
உங்கள் அன்பின் அணைப்பு
என்றும் மனதை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டுகின்றோம்

(கு-9431)

கற்பக பிள்ளையார் கோவிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்:-
குடும்பத்தினர்

## ஏல விற்பனை

துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தில் பாவிக்கப்பட்ட தளபாடம், கணனி உபகரணங்கள் போன்றன எதிர்வரும் 2017.09.06ம் திகதி மு.ப 10.00 மணியளவில் எமது அலுவலகத்தில் ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளது. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம், துணுக்காய்

(கு-9432)

## கார் விற்பனைக்கு

TOYOTA AQUA HYBRID 2013
DOCTOR USED
GRAY COLOUR FULLY LOADER
Multifunction DVD, R.Camera
Low mileage
superb condition immediate sale in Jaffna.
PRICE NEGOTIABLE
T:P.0777968805
(229)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர்கள் பதவியேற்பு





புதிய நீதி அமைச்சராக தலதா அத்துகோரள மற்றும் புதிய புத்தசாசன அமைச்சராக காமினி ஜயவிக்கிரம பெரேரா ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன் னிலையில் நேற்றுக் காலை பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை நிறைவேற்றத் தவறிய குற்றச்சாட்டிற்காக நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள மற்றும் நிலையான அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கூட்டு எதிர்க்கட்சி கொண்டு வந்த பிரேரணை நாடாளுமன்றில் தோல்வி

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்ட பிரேரணை மீதான வாக்கெடுப்பு நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்றது.

இதில் ஆதரவாக 43 பேரும், எதிராக 117 பேரும் வாக்களித்துள்ளனர்.

அரச உயர் அதிகாரிகள் தேர்தலில் பங்குபற்றக் கூடாது என்பது தொடர்பில் குறித்த பிரேரணையை கூட்டு எதிர்க் கட்சியினர் முன்வைத்திருந் தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் நேற்று நடத்தப்பட்ட வாக்கெடுப்பு தோல்வியடைந்துள்ளது. (இ-7)

# அரசின் வருமானம் கடும் வீழ்ச்சி

## அமைச்சர் கயந்த தகவல்

(கொழும்பு)

அரசாங்கத்தின் வருமானம், இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது என அமைச்சர் கயந்த கருணாதிலக நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.



அரசாங்கத்தின் 2017 ஆண்டின் முதல் அரை ஆண்டு நிதி நிலைமை தொடர்பாக அமைச்சர் கயந்த கருணாதிலக நாடாளுமன்றத்தில் நேற்று 'முன்தினம்' அதிகாரபூர்வ தகவல்களை வெளியிட்டார்.

இதற்கமைய, இந்த ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில், இரண்டாவது காலாண்டில் அரசாங்கத்தின் வருமானம், 14,240 மில்லியன் ரூபாவினால் வீழ்ச்சியடைந்துள் ளது.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில், அரசாங்கத்தின் வருமானம் 445,250 மில்லியன் ரூபாவாக இருந்தது. இது இரண்டாவது காலாண்டில், 431,010 மில்லியன் ரூபாவாக குறைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## 20ஆவது அரசியலமைப்புக்கு எதிராக கம்மன்பில மனு



(கொழும்பு)

20ஆவது அரசியலமைப்பு சீர்திருத்த சட்ட மூலத்துக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த திருத்த சட்ட மூலம் அரசியலமைப்புக்கு முரணானது என குறித்த மனுவின் மூலம் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த சட்டமூலத்தை நிறைவேற்ற பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு மேலதிகமாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தபட வேண்டும் என தீர்ப்பளிக்குமாறு அவர் உயர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

20ஆவது அரசியலமைப்பு சீர்திருத்த சட்ட மூலம் கடந்த 23ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இறக்குவானையில் இளம் யுவதி கழுத்து வெட்டிப் படுகொலை

(கொழும்பு)

இறக்குவானை, பட்டேயாய, அந்தானை பிரதேசத்தில் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு இளம் யுவதி ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கஹவத்தை பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வசிக்கும் யுவதி ஒருவரே நேற்று பிற்பகல் இவ்வாறு கழுத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

19 வயதுடைய யுவதி ஒருவரே உயிரிழந்திருப்பதுடன், சந்தேகத்தின் பேரில் அதே பிரதேசத்தை சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்பதுடன், சந்தேக நபர் பெல்மதுல்ல நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார். (இ-7)

## துன்னாலையில் வன்முறை

# 39 பேருக்கும் மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

துன்னாலை பகுதியில் இடம்பெற்ற மண் கடத்தல், பொலிஸார், கடற்படையினர், இராணுவ வாகனம் மீதான தாக்குதல் சம்பவங்கள், ரயர் போட்டு எரித்தமை போன்ற பல செயல்களில் ஈடுபட்டோர் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 39 பேரும் நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இந்நிலையில் சந்தேக நபர்கள் அனைவரையும் நாளை மறுதினம் 28 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிபதி நளினி சுபாகரன் உத்தரவிட்டுள்ளார். (இ-3-60)

# பொலிஸார் மீது வாள்வெட்டு! ஏழு சந்தேக நபர்களுக்கும் எதிர்வரும் 31 வரை மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் நந்தாவில் பகுதியில் பொலிஸார் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டதாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஏழு பேரையும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் திருமதி காயத்திரி சைலயன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி 10 இற்கும் மேற்பட்ட இளைஞர் குழுவால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரு பொலிஸார் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை விசாரணைகளின் அடிப்படையில் பயங்கரவாதத் தடுப்பு பிரிவு மற்றும் குற்றத் தடுப்புப்பிரிவு பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பிரதான சந்தேக நபர்களாக 7 பேர் கடந்த 22 ஆம் திகதி விசாரணைக்காக நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அப்போது அவர்களை நேற்றைதினம் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு கட்டளையிடப்பட்டது.

இந்நிலையில் நேற்றைய தினம் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே அவர்களை 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-7)

# உற்பத்தி இல்லாமல் வளர்ச்சியை நாம் எதிர்பார்க்க முடியாது-ரணில்



(கொழும்பு)


பொருளாதார உற்பத்தி இல்லாமல் பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்க்க முடியாது. அத்துடன் தனியார் துறையில் அதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்க எதிர்பார்க்கின்றோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய நிர்மாணத்துறை சங்கத்தினால் 17ஆவது தடவையாக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த நிர்மாணத்துறை கண்காட்சி திறப்பு விழா நேற்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய கால்பந்து சங்க சிறந்த வீரர் விருது

# 3ஆவது முறையாக ரொனால்டோ வசம்




ஐரோப்பிய கால்பந்து சங்கத்தின் சார்பில் வழங்கப்படும் சிறந்த வீரர் விருதை 3ஆவது முறையாக கிறிஸ்டியானோ ரொனால்டோ தட்டிச் சென்றுள்ளார்.

ஐரோப்பிய கால்பந்து சங்கம் சார்பில் ஆண்டுதோறும் கழக அணிகளில் விளையாடுவதில் யார் சிறந்த வீரர் என்பதை தேர்வு செய்து அவருக்கு சிறந்த வீரர் விருது வழங்கப்படும்.

2016-17ஆம் ஆண்டுக்கான விருது போட்டியில் ரியல் மட்ரிட் அணியில் விளையாடும் ரொனால்டோ (போர்த்துக்கல்), பார்சிலோனாவின் மெஸ்சி (ஆர்ஜென்டினா), யுவான்டஸ் அணியின் கோல்காப்பாளர் பஃபோன் இடையே கடும் போட்டி நிலவியது.

நேற்றுமுன்தினம் இரவு சிறந்த வீரருக்கான விருது அறிவிக்கப்பட்டது. இதில் ரொனால்டோ சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்டார். ரொனால்டோ 3ஆவது முறையாக இந்த விருதை வென்றுள்ளார்.

ஏற்கனவே அவர் 2013, 2015 ஆண்டு விருதை வென்று இருந்தார். சிறந்த வீராங்கனைக்கான விருது நெதர்லாந்தின் மார்டென்ஸுக்கு வழங்கப்பட்டது.

சிறந்த நடுக்கள வீரர் விருதை லூகா மோட்ரிக்கும் சிறந்த பின்கள வீரருக்கான விருதை ரியல் மட்ரிட் அணியின் தலைவர் செர்ஜியோ ரமோஸும் சிறந்த கோல் காப்பாளருக்கான விருதை பஃபோனும் பெற்றனர்.

# டெஸ்டில் ஆடுவதைப் போல் ஆடுங்கள்

## புவனேஸ்வருக்கு அறிவுரை வழங்கிய தல தோனி




டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆடுவதுபோல் உங்களது வழக்கமான ஆட்டத்தை வெளிப்படுத்துங்கள் என்று தோனி அறிவுரை கூறினார் என புவனேஸ்வர் குமார் கூறியுள்ளார்.

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் பல்லேகலே மைதானத்தில் நடைபெற்றது. இந்தியா 47 ஓவர்களில் 231 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது.

ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய ரோகித் சர்மாவும் (54), தவானும் (49) சிறப்பாக விளையாடிய போதிலும் அதன் பின் துடுப்பெடுத்தாட வந்த வீரர்கள் மோசமாக விளையாட திடீர் சரிவைக் கண்ட இந்தியா 131 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 7 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்தது.

8ஆவது விக்கெட்டுக்கு தோனியுடன் ஜோடி சேர்ந்த புவனேஸ்வர் குமார் சிறப்பாக விளையாடினார். இருவரும் இணைந்து 100 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தனர். புவனேஸ்வர் குமார் 53, தோனி 45 ஓட்டங்கள் எடுத்தனர். புவனேஸ்வர் குமார் 9ஆவது வீரராக களமிறங்கி அரைச்சதம் அடித்து சாதனை படைத்தார்.

இப்போட்டியில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த தோனியின் அறிவுரையே முக்கிய காரணம் என்று புவனேஸ்வர் குமார் கூறியுள்ளார்.

இதுகுறித்து புவனேஸ்வர் குமார் கூறுகையில், "நான் துடுப்பாட்டம் செய்ய களமிறங்கும்போது, தோனி என்னிடம் வழக்கமான ஆட்டத்தை வெளிப்படுத்துங்கள். டெஸ்ட் போட்டியில் நீங்கள் எப்படி விளையாடுவீர்களோ அப்படி விளையாடுங்கள். இன்னும் ஏராளமான ஓவர்கள் உள்ளன. அதனால் நெருக்கடிக்குள்ளாக வேண்டாம் என்று கூறினார். அவர்களை சமாளித்து விட்டால் எங்களால் கட்டாயம் சேஸிங் செய்ய முடியும் என்பது எங்களுக்குத் தெரியும்.

ஏற்கனவே 7 விக்கெட்டுக்கள் இழந்த நிலையில் இழப்பதற்கு ஏதும் இல்லை என்பது எனக்குத் தெரியும். தோனிக்கு சப்போர்ட் ஆக விளையாடினால் போதுமானது என்று நினைத்தேன். அதை மனதில் வைத்துதான் விளையாட முயற்சி செய்தேன்.

தொடக்க வீரர்கள் சிறப்பாக விளையாடியது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்புறம் விரைவாக 4 விக்கெட்டுக்கள் இழந்த பின்னர் சற்று பீதியான சூழ்நிலை ஏற்பட்டது. டிரெஸ்ஸிங் அறையில் இருந்தோ, தோனியிடம் இருந்தோ எந்த தகவலும் எனக்கு வரவில்லை. அவர்கள் என்னை நீண்ட நேரம் விளையாட விரும்பியுள்ளார்கள் என்ற விடயம் மட்டும் புரிந்தது. நானும் அதே எண்ணத்தில் விளையாட விரும்பினேன். 47 ஓவர்களும் விளையாடினால் வெற்றி பெற்று விடலாம் என்ற நிலை இருந்தது. இதுதான் என்னுடைய திட்டமாக இருந்தது" என்றார்.

# தரங்க நீக்கம், குணதிலக காயம்

## இலங்கை அணியில் சண்டிமல், திரிமன்னே

இந்திய அணியுடனான 3ஆவது, 4ஆவது ஒரு நாள் போட்டிக்கான இலங்கை அணியில் இருந்து அணித் தலைவர் உபுல் தரங்க நீக்கப்பட்டுள்ளார். குணதிலக காயம் அடைந்துள்ளார். இதனால் அணியில் சண்டிமல், திரிமன்னே சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்திய - இலங்கை அணிகளுக்கு இடையிலான 2ஆவது போட்டி பல்லேகலேயில் நேற்று முன்தினம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 236 ஓட்டங்கள் எடுத்தது. போட்டியின் இடைவேளையின்போது மழை பெய்ததால் இந்திய அணியின் வெற்றிக்கு 47 ஓவர்களில் 231 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இந்த போட்டியில் தோனி மற்றும் புவனேஸ்வர் குமார் சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்தபோது இலங்கை அணிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. நீண்ட நேர ஆலோசனையில் ஈடுபட்டுக் கொண்டே இருந்தனர். இதனால் குறிப்பிட்ட நேரத்திற்குள் இலங்கை அணியால் பந்து வீச முடியவில்லை. மூன்று ஓவர்கள் குறைவாக வீசியதை போட்டி நடுவர் அண்டி பைகிராப்ட் கண்டுபிடித்தார்.

ஏற்கனவே சம்பியன்ஸ் டிரொபி தொடரின்போது இலங்கை அணி மெதுவாக பந்துவீசியிருந்தது. மூன்று மாதத்திற்குள் மேலும் ஒருமுறை இவ்வாறு செய்ததால் தரங்கவிற்கு இரண்டு போட்டிகளில் விளையாட தடைவிதிக்கப்பட்டது.



இந்தியாவின் துடுப்பாட்டத்தின்போது 33ஆவது ஓவரில் தோனி அடித்த பந்தை குணதிலக பாய்ந்து பிடிக்க முயன்றார். அப்போது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. இதற்காக அவர் 10 நாட்கள் ஓய்வில் இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆகவே, தரங்க மற்றும் குணதிலக ஆகியோருக்குப் பதிலாக சண்டிமல் மற்றும் திரிமன்னே ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். தரங்கவிற்குப் பதிலாக சாமர கபுகெதர தலைவராக பணியாற்றுவார்.



மே.தீவுகளுக்கு எதிராக லீட்ஸில் நடைபெற்று வரும் 2ஆவது டெஸ்ட் போட்டியின் நேற்றைய முதல் நாள் ஆட்டத்தில் அபாரமாக ஆடி சதம் (100) அடித்த பென் ஸ்ரோக்ஸ்.

# இராணுவம் மீது தாக்குதல்

## தனிப்பட்ட முரண்

கிளிநொச்சி - ஊற்றுப்புலம் பகுதியில் இராணுவத்தைச் சேர்ந்த இரண்டு பேர் மீது நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட தாக்குதல் தனிப்பட்ட முரண்பாடுகளால் நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பிரிவு இதனை ஊடகங்களிடம் தெரிவித்துள்ளது.

அடையாளம் தெரியாத குழு ஒன்று குறித்த இரண்டு இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தியுள்ளது.

இதில் காயமடைந்த இரண்டு பேரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று மாலை வரையில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (செ-11)

# சைட்டத்துக்கு எதிராக

# யாழில் நேற்று போராட்டம்




(யாழ்ப்பாணம்)

சைட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று பிற்பகல் ஆரம்பிக்கப்பட்டு முற்றவெளி நோக்கி பேரணியாக தொடர்ந்திருந்தது.


யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட கிளிநொச்சி வளாக மாணவர்களாலும் ஏனைய மாணவர்களாலும் இணைந்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

சைட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று யாழ்ப்பாணத்திலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தில் சுமார் ஐந்நூறு மாணவர்கள் வரை கலந்து கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவியந்திரம் திடீரென தடம்புரண்டது




(யாழ்ப்பாணம்)

மணல் ஏற்றி வந்த உழவியந்திரம் தடம் புரண்டதில் சாரதி படுகாயமடைந்தார்.

ஆரியகுளம் சந்தியில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் மணல் ஏற்றி வந்த உழவியந்திரம் வேகக் கட்டுப்பாட்டையிழந்து தடம் புரண்டதில் வாகனத்தின் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

அத்துடன் உழவியந்திரத்தில் கொண்டு செல்லப்பட்ட மணல் வீதியில் கொட்டியதால் ஆரியகுளம் சமிக்ஞை விளக்கு சந்தியில் சில மணி நேரம் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது. (இ-9-10)

# எரிபொருள் நிரப்பு நிலையம் சாம்பல்





எரிபொருள் நிரப்பு நிலையம் திடீரென எரிந்து சாம்பலானது. நிட்டம்புவ, கலகெடிஹேன பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் பாரிய தீ விபத்து நேற்று ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கொழும்பு - கண்டி பிரதான வீதியில் பாரிய வாகன நெரிசல் எற்பட்டது.

தீ விபத்து காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் அங்கிருந்த பவுசர் ஒன்றும் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஆளுமை திறனூக்கப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மணவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் ஆரம்ப ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இடம்பெறும்.

மேலும் அகத்தாய்வு-04 நிகழ்வு, விசன் டிப்ளோமா நிகழ்வு என்பன காலை 9 மணிக்கு இடம்பெறும். (இ-3)

# கூட்டு எதிரணி உறுப்பினர் ஜனாதிபதியுடன் இணைவு



(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியின் பிரதான உறுப்பினர்களுள் ஒருவரான பண்டாரகம பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சஞ்சய ஹெட்டிகே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செயற்றிட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதியை சந்தித்தார்.

நாட்டிற்குத் தேவையான அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களுடன் நாட்டை பேண்தகு அபிவிருத்தியை நோக்கி கொண்டு செல்வதற்கு ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்றிட்டங்களுடன் இணைந்து அர்ப்பணிப்புடன் தான் செயற்படவிருப்பதாக அவர் இதன் போது தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (இ-7)

# விக்னேஸ் கனடா பயணம்

கனேடிய தமிழ் பேரவையினால் (Canadian Tamil Congress) ஒழுங்கு செய்யப் ட்டு இன்றும் நாளையும் ரொறன்ரோவில் நடைபெறவுள்ள வர்த்தக கண்காட்சி மற்றும் அதனைத் தொடர்ந்து செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள வர்த்தக மாநாடு 2017 நிகழ்வுகளில் பங்கு கொள்வதற்காக கனேடிய தமிழ் பேரவையின் விசேட அழைப்பின் பேரில் யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் தலைவர் குலரட்ணம் விக்னேஸ் கனடா பயணமானார்.

எதிர்காலத்தில் வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் நடவடிக்கைகளை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லவும் கனேடிய தமிழ் வர்த்தக சமூகத்தின் முதலீடுகளை எமது பிராந்தியத்திற்கு கொண்டு வரவும் கனேடிய தமிழ் வர்த்தக சமூகத்தின் முதலீடுகளை எமது பிராந்தியத்திற்கு கொண்டு வரவும் கனேடிய தமிழ் வர்த்தகர்களுடனான எமது வர்த்தகர்களின் வியாபார பலப்படுத்தல்களை கருத்தில் கொண்டும் இந்தப் பயணம் அமைந்துள்ளது. (இ

# இராசி பலன்

26.08.2017
(ஆவணி 10, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
பஞ்சமி முன்னிரவு 11.28 மணிவரை
சித்திரை மாலை 6.44 மணிவரை
சுபநேரம் 3.05-4.35 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை
ரிசி பஞ்சமி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை | | ராகு, செவ், சுக், புத |
| கேது | சந்திராஷ்டமம் | பூரட்டாதி-உத்தரட்டாதி | சூரி |
| | சனி | சந் | குரு |

**மீனம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், தொழில் ரீதியான பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை.

**மேடம்:** நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், உடல்நலன் சீராகும், போசன சுகமுண்டு.

**இடபம்:** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், தொழில் விருத்தியுண்டு.

**மிதுனம்:** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், மாற்று மருத்துவத்தால் உடல் நலன் சீராகும், பயணங்கள் எளிதில் கைகூடும்.

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**மகரம்:** எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**சிம்மம்:** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், சுகாதார ஒற்றுமை மேலோங்கும்.

**தனுசு:** வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சுப தகவல் வந்து சேரும்.

**துலாம்:** உறவினர்கள் தொடர்பான சில காரியங்களுக்காக சற்று அலைய நேரிடலாம், சிந்தனை மிகுதியான நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி:** சுயமுயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடாவடியில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்

## வடமாகாண அழகக சம்மேளனம் கண்டன அறிக்கையில் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். உரும்பிராய் பகுதியிலுள்ள அழகக நிலையம் மீது 22.08.2017 மாலை 6 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் வாள்வெட்டில் ஈடுபட்டு அழகக நிலையத்தையும் சேதப்படுத்தியுள்ளனர். இச் செயலை வடமாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

அத்தோடு எதிர்காலத்தில் வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்ள வர்த்தக சமூகம் அச்சப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்ட சமாதான சூழ்நிலை எவ்வித பயமும் இன்றி வர்த்தக நிலையங்களைத் திறந்து தொழில் புரிந்து வருகின்றனர்.

மதுபோதையில் வர்த்தக நிலையங்கள் மீது வாள் வெட்டில் ஈடுபடுவோர் மீது எமது அழகக சங்கங்களின் சம்மேளனம் மட்டுமல்லாது மற்றும் வர்த்தக சங்கங்கள், பொது அமைப்புக்கள் எங்களுக்கு உதவிக்கரம் கொடுத்து தாக்குதலைக் கண்டித்து கண்டன அறிக்கை விடுவதோடு நின்று விடாது எதிர்காலத்தில் எமது வர்த்தக சமூகத்திற்கு இப்படியொரு நிலை வராது இருக்க சம்பந்தப்பட்ட அடாவடித்தாக்குதல்செய்தவர்களை நீதியின் முன்னிறுத்தி சேதத்திற்குள்ளான அழகக உரிமையாளருக்கு நட்ட ஈடு பெற்றுக்கொடுத்து ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அத்தோடு இனிவரும் காலங்களில் வர்த்தக நிலையங்களுக்கு இப்படி ஒரு நிலை வராமல் இருப்பதற்கு நீதித்துறையினர் சட்ட நடவடிக்கை எடுக்க உதவுமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என அந்தக் கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-60)




## மஹோற்சவம்

மண்கும்பான் ஸ்ரீ முருகமூர்த்தி கோவிலின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அன்று முதல் 12 நாட்கள் மஹோற்சவ பூஜைகள் இடம்பெறவுள்ளன. எதிர் வரும் செப்டெம்பர் 5ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 6ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

செப்டெம்பர் 7ஆம் திகதி தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது. காலை 8 மணிக்கு வசந்தமண்டப பூஜைகள் ஆரம்பித்து 9.30 மணிக்கு முருகமூர்த்தி பெருமான் தேரில் ஆரோகணிக்கவுள்ளார். 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் அன்று இரவு 8 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன. (இ-3)

## மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் செருக்கன் கிணற்றடி ஞானவைரவர் ஆலய நூதன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 03 ஆம் திக்தி ஞாயிற்றுக்கிழமை காலை 07.45 மணி முதல் 08.52மணி வரையுள்ள கன்னி லக்ன வேளையில் இடம் பெறவுள்ளது

இந் நிகழ்வுகள் பிரதிஷ்டா பிரதம குரு கிரியா பூஷணம்.சகலாகம சங்கிரகர் . சிவப்பிரமஸ்ரீ துரை உமாசங்கரக்குருக்கள் மற்றும் ஆலய குரு பிரம்மஸ்ரீ ச.ஈஸ்வரஸர்மாவினாலும் இடம் பெறும். பூர்வாங்க கிரியைகள் எதிர்வரும் 01ஆம் திகதி வெள்ளிக்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி தொடர்ந்து எண்ணெய்க் காப்பு சாத்தும் தெய்வீக நிகழ்வுகள் 02ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் இடம்பெறும்.

மறுநாள் காலை கும்பாபிஷேகம் இடம் பெற்று தொடர்ந்து 12நாட்கள் மண்டலாபிஷேக பூசைகளுடன் எதிர்வரும் 14ஆம் திகதி சங்காபிஷேகமும் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும். (இ)

### நல்லூர் மஹோற்சவ காலத்தில்

## தவறிவிட்ட பொருட்களை உறுதிப்படுத்தி பெற முடியும்

நடைபெற்று முடிந்த நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவ திருவிழாவின் போது பக்தர்களால் தவறவிடப்பட்ட கைக்கடிகாரம்,தேசிய அடையாள அட்டை, வங்கி அட்டை, உருத்திராட்ச மாலை, தொலைபேசி, சில கைப்பைகள் யாழ்ப்பாணம் மாநகர சபையில் ஒப்படைக்கப்பட்டு இன்றுவரை உரிமை கோரப்படாத நிலையிலுள்ளது. இவற்றின் உரிமையாளர்கள் உரிய அடையாளத்தை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்ளலாம் என யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் அறிவித்துள்ளார். (இ)



நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பனை வள அபிவிருத்தியும் சந்தைப்படுத்தலும் மற்றும் மேம்படுத்தல் எனும் தொனிப்பொருளில் பயிற்சி வேலைத்திட்டம் ஒன்று பிரதேச செயலர் சி. ஜெயகாந்த் தலைமையில் அண்மையில் இடம்பெற்றபோது...

## உதவி வழங்கல்




விவேகம் திரைப்பட வெளியீட்டை முன்னிட்டு யாழ். தலரசிகர்க ளால் பாடசாலை உபகரணங்கள், உணவுக்குத் தேவையான பொருட்கள் தலா ஒவ்வொரு குடும்பத்திற்கும் 15000, 10000, பணப்பெறுமதிகளும் செல்வா திரையரங்கில் வைத்து நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. (இ-3)

## கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான ஆங்கில கற்கை நெறிகளும், தொழில்சார் கற்கை நெறிகளும் யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் ஆரம்பிக்கப் படவுள்ளதால் கீழ்வரும் தகைமை உடையவர்கள் 04.09. 2017 இற்கு முன்னர் தொழில்நுட்பவியல் கல்லூரி தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கவும். தொலைபேசி இலக்கம் 021 221 2403, க.பொ.த (சா/த) ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உடையவர்களுக்கான Advancing career skills, க.பொ.த (சா/த) ஆங்கிலத்தில் சாதாரண சித்தி உடையவர்களுக்கான Developing career skills, க.பொ.த(சா/த) தகைமை உடையவர்களுக்கான கணனி வன்பொருள் சான்றிதழ், தரம் 10 ஐ பூர்த்தி செய்த மாணவர்களுக்கான வெல்டிங் போன்ற கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

## தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய மஹோற்சவ ஒழுங்குகள்

(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய மஹோற்சவம் கடந்த 23.08.2017 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 03.09.2017 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவடைய இருப்பதனால் இவ் உற்சவகாலத்தில் கலந்து கொள்ளும் பக்த அடியார்கள் பின்வரும் நடைமுறைகளை கடைப்பிடித்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ளும் பக்த அடியார்கள் ஆலயத்தின் புனிதத் தன்மையை பாதுகாப்பதுடன், ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் இந்து சமய, கலாசார பண்பாட்டை பேணிக்காக்கும் கலாசார உடைகளுடன் சமூகமளிக்குமாறும் ஆலய வளாகத்தில் பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையை தவிர்க்குமாறும் ஆலய வளாகத்தில் குப்பைகளை அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் போட்டு ஆலய வளாகத்தை புனிதமாகப் பேணுமாறும் ஆலய வளாகத்தில் பாதணிகளுடன் செல்வதை தவிர்க்குமாறும் வாகனத் தரிப்பிடத்தில் வாகனங்களை நிறுத்தி, ஒழுங்குகளை கடைப் பிடித்துதவுமாறும் கேட்டுக்கொள்கின்றேன் என தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ். சிவசிறி அறிவித்துள்ளார். (இ)

## ஆன்மீக நிகழ்வுகளில் இன்று

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ காலத்தை முன்னிட்டு தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலையின் அனுசரணையில் நடைபெறும் ஆன்மீக நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரை ஆலய முன்றலில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் இடம்பெறும். இதில் செல்வச் சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பஜன், அகில இலங்கை சைவ மகாசபையின் செயலாளர் டாக்டர்.பரா.நந்தகுமார், தமிழ்நாடு இந்தியாவைச் சேர்ந்த பெரியாழ்வார் இராமனுசதாசர், அருள்நிதி நா.யாகவர்ணன் ஆகியோரின் பிரசங்கம் என்பன இடம்பெறும். (இ-3)

## கலாசார மத்திய நிலையம் அமைக்க காணி அன்பளிப்பாக வேண்டும்

உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் நாடளாவிய ரீதியாக மத்திய நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் நல்லூர் பிரதேச செயலக பிரிவில் கலாசார மத்திய நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந் நிலையம் அமைப்பதற்கு 6 பரப்பு காணி உடனடியாக தேவையாகவுள்ளது. எனவே நல்லூர் பிரதேச பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இதனை அமைப்பதற்கு பொருத்தமான காணியை அன்பளிப்புச் செய்ய விரும்புபவர்கள் நல்லூர் பிரதேச செயலக கலாசார பிரிவில் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலாளர் எ.அன்ரன் யோகநாயகம் கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

### கோப்பாய் வைத்தியசாலையின்

## காசநோயாளர் விடுதி மீளக் கையளிக்கும் நிகழ்வு

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306B1 மாவட்டத்தின் ஏற்பாட்டில் தென்கொரிய அனுசரணையில் புனரமைப்புச் செய்யப்பட்ட கோப்பாய் பிரதேச வைத்தியசாலையின் காசநோயாளர் விடுதி மீளக் கையளிக்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் கே.நந்தகுமரன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் லயன்ஸ் கழக வடமாகாண ஆளுநர் கமிலஸ் பெர்னாண்டோ, லயன்ஸ் கழக முன்னாள் வடமாகாண ஆளுநர் லயன் வை.தியாகராஜா மற்றும் லயன்ஸ் கழக நிர்வாகிகள் கலந்து கொள்வர். (இ-10-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்பு நேற்று 6-வது நாளில் முடிவுக்கு வந்தது

அநுராதபுரம் சிறைச்சாலையில் தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அரசியல் கைதிகள் மூவரும் தமது போராட்டத்தை நேற்றைய தினம்காலை முடிவுக்கு கொண்டு வந்த னர்.

அநுராதபுரம் சிறைச்சாலைக்கு நேற்றுக்காலை சென்ற மன்னார் பிரஜைகள் குழுவினர் மற்றும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பினர் இணைந்து இவர்களுடைய உணவு தவிர்ப்பு போராட்டத்தினை முடித்துவைத்தனர்.



பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடந்த 2009 ஆண்டு கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகளான யாழ்ப்பாணத்தை சேர்ந்த இராசதுரை திருவருள் (வயது- 40), கரணவாயை சேர்ந்த மதியரசன் சுலக்ஸன் (வயது 30), நாவலப்பிட்டியை சேர்ந்த கனேசன் தர்சன் (வயது 26) ஆகியோருக்கு எதிராக கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து வவுனியா நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகிறது.

குறித்த வழக்கு நிறைவடையும் நிலையில் இந்த வழக்கை சட்டமா அதிபர் திணைக்களம் தெற்கில் உள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்ட காரணத்தினால் குறித்த நடவடிக்கைகளை நிறுத்துமாறு கோரி கடந்த 20 ஆம் திகதியில் இருந்து தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை இந்த மூன்று கைதிகளும் ஆரம்பித்திருந்தனர்.

இதில் இரண்டு கைதிகள் உடல் நிலை மோசமடைந்து நேற்று முன்தினம் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் நேற்றைய தினம் 6 ஆவது நாளாக உணவ்வு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கைதிகளை பார்வையிடுவதற்காக, மன்னார் பிரஜைகள் குழுவினர், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பினர் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்றனர்.

அங்கு சென்று கைதிகளுடன் கலந்துரையாடியதுடன் அவர்களின் உணவு தவிர்ப்பு போராட்டத்தினை நிறைவு செய்து வைத்திருந்தனர்.

அத்துடன் அரசியல் கைதிகளின் கோரிக்கை உள்ளிட்ட மகஜர் ஒன்று ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு, அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைபினால் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

அத்துடன் வவுனியா நீதிமன்றில் அடுத்த மாதம் விசாரணை ஆரம்பிக்கப்படும் என நீதிபதி உத்தரவிட்டமையை கருத்தில் கொண்டு, குறித்த வழக்கு வவுனியா நீதிமன்றில் நடைபெறும் என்ற நம்பிக்கையினடிப்படையில் குறித்த கைதிகள் தமது உணவு தவிர்ப்பு போராட்த்தினை ஆறாவது நாளில் முடிவுக்கு கொண்டு வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

# 8ஆவது தடவையாக ஆரம்பமாகும் கூட்டுப்படை பயிற்சி அப்பியாசம்

2017 ஆம் ஆண்டிற்கான கூட்டுப் படை பயிற்சி நடவடிக்கை 8ஆவது தடவை ஆரம்பமாகின்றது. வெளிநாட்டு இராணுவ அங்கத்தவர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் 62 பேர் உட்பட இலங்கை முப்படையினர் 2675 பேருடன் இராணுவ பயிற்சிகள் "கூட்டுப் படை பயிற்சி அப்பியாசம்' 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

2009ஆம் ஆண்டு இடம் பெற்ற இறுதி யுத்தத்தின் போது இலங்கை இராணுவம் பெற்றுக் கொண்ட அனுபவத்தை பகிர்ந்து கொள்ளும் நோக்கத்துடனும் சகோதரத்துவ சேவையை அதிகரிக்கும் நோக்கத்துடனும் இந்த கூட்டுப் படைப் பயிற்சிகள் 2010ஆம் ஆண்டு இராணுவத்தினரால் அறிமுகம் செய்யப்பட்டதுடன் 8வது தடவையாக இம்முறை இடம் பெறுகின்றது. (இ-7)

# பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமைகோரப்படாத நிலையில்காணப்படுகின்றது. எனவே குறித்த சான்றுப்பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 02 மாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலைநாட்டும் படி குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவையின் 431(2)ன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது என பதிவாளர் அறிவித்துள்ளார். வழ.இலக்கம்:- AR/566/17, சான்றுப் பொ.இல:-PR/768/17, சான்றுப்பொருள் விபரம்:-56071602 இலக்க ஆண்கள் துவிச்சக்கர வண்டி மறுதவணை:-21.08.2017 மன்றின் கட்டளைப்படி. (இ

# கடற்படையின் புதிய ஊடக இணைப்பாளர் நியமனம்

(கொழும்பு)

கடற்படை புதிய ஊடக இணைப்பாளராக கொமாண்டர் லங்காநாத திசாநாயக்க நியமிக்கப்பட்டுள் ளார்.

கடற்படை ஊடக இணைப் பாளராக பணியாற்றும் லுதினன் கொமாண்டர் சமிந்த வலாகுலுகே புதிய உயர் பதவிக்காக இடமாற்றம் பெற்று செல்வதால் புதிய கடற்படை ஊடக இணைப் பாளராக கொமாண்டர் லங்காநாத திசாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.



இவர் இலங்கை கடற்படையில் இணைந்து 20 வருடங்கள் கடற்படையின் ஏவுகணை கப்பலின் நிறைவேற்று அதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார்.(இ-7)

# தீர்த்தமாடியவர் உயிரிழப்பு

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோளாவில் பிரதேசத்தில் ஆலய உற்சவத்தின் தீர்த்தோற்சவத்திற்காக கடலுக்குள் சென்ற இளைஞன் கடலலையில் சிக் குண்டு நேற்று உயிரிழந்ததுடன், மற்றுமொரு இளைஞன் காப்பாற்றப் பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் கோளாவில் பிரதேசத்தை சேர்ந்த 28 வயதுடைய இராமலிங்கம் ஜெகன் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் அக்கரைப் பற்று பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர். (இ-7)


## பொதுக்கூட்டம்

உரும்பிராய் காளி அம்பாள் பொதுச் சபைக் கூட்டம் 27.08.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும் என்பதனை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம். அங்கத்தவர்கள் தவறாது சமூகம் தரவும்.

(216) செயலாளர்

## பெண் ஊழியர் தேவை

நல்லூர் சுற்றாடலில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்து கடமை புரியக்கூடிய பெண் உதவியாளர் தேவைப்படுகின்றது. தகுந்த வேதனம் வழங்கப்படும். விரும்புபவர்கள் சனி, ஞாயிறு தினங்களில் மாலை 5:00 மணி தொடக்கம் 9.00 மணிக்கிடையில் பின்வரும் தொலை பேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

077 900 4380 (C-9420)

## பெயர் மாற்ற அறிவித்தல்

இமையாணன் இலந்தைக்காடு உடுப்பிட்டியை வசிப்பிடமாகக் கொண்ட கனகலிங்கன் ஆகிய எனது பெயரை மாணிக்கன் கனகரத்தினம் என மாற்றம் செய்து இன்று முதல் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்

(C-9429) உரிமையுள்ள மாணிக்கன் கனகரத்தினம்

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 11சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/7680 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 52செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:HNDA, BSc<br>தொ.இ: G/7684 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: B/7682 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 38<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:பல் வைத்தியர்<br>தொ.இ: G/7686 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 35செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/7683 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 28<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: G/7689 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7685 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:பட்டதாரிசுவிஸ்<br>தொ.இ: G/7692 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் வாள்வெட்டு; சந்தேகத்தின் பேரில் 6 பேர் கைது

கிளிநொச்சி வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் ஆறுபேர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊற்றுப்புலம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இரண்டு தமிழ் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டு சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கிராமத்தில் ஏற்பட்ட சிறு பிரச்சினை முற்றியதில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் இராணுவத்தில் சேவையாற்றி விடுமுறையில் சென்ற இருவரே குறித்த வாள்வெட்டுக்கு இலக்காகிய நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட குறித்த இருவரில் ஒருவர் கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதுடன். மற்றையவர் இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் ஆறுபேர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றில் அடையாள அணி வகுப்பிற்கு முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். அத்துடன் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (2-312)

# ஓட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீளவும் இயங்க வைப்பதன்மூலம் தொழில் வாய்ப்பைப்பெற முடியும்

## பிரதேச மக்கள் கோரிக்கை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய தொழிற்சாலைகளில் ஒன்றாகக் காணப்படுகின்ற ஓட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீள இயங்கவைப்பதற்கும் அதன் மூலம் நூற்றுக்கும் மேற்பட்டோர் தொழில் வாய்ப்புக்களைப்பெறுவதற்கும்நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.


முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய தொழிற்சாலைகளில் ஒன்றாகவும் வடமாகாணத்தில் வருமானம் ஈட்டக்கூடிய ஒரு பாரிய தொழிற்சாலையாகவும் காணப்படுகின்ற ஓட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை யுத்தத்தினால் சேதமடைந்து இதுவரை மீள அமைக்கப்படாது காணப்படுகின்றது.

தொழிற்சாலை கடந்த 1990 ஆம் ஆண்டு வரை இயங்கி வந்ததுடன், இங்கு நூற்றுக்கும் மேற்பட்டோர் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றிருந்ததோடு. தரமான ஓட்டு உற்பத்தியும் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. இதன் பின் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலையால் குறித்த ஓட்டுத் தொழிற்சாலையானது படிப்படியாக செயலிழந்துள்ளது.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வையடுத்து ஏழு வருடங்கள் கடந்த போதும், இந்த ஓட்டுத்தொழிற்சாலையைக் இயக்குவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் இதனை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுமார் 13 ஏக்கர் நிலப் பரப்பைக்கொண்ட இத்தொழிற்சாலையினது ஓடு உற்பத்திக்கான இயந்திரங்கள், ஓடு சூளையிடும் பகுதி என்பனவும் சேதமடைந்துள்ளன.

இதனை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகியோர் தொடர்ச்சியாக கோரிக்கை



விடுத்து வருகின்றனர்.

எனவே இந்த ஓட்டுத் தொழிற்சாலையை மீள இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ள இப்பகுதி மக்கள் இந்த தொழிற்சாலை இயங்கும் போது நூற்றுக்கும் மேற்பட்டோர் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதுடன், மாவட்டத்திற்கான ஓர் வருமானத்தையும் ஈட்டக் கூடியதாக அமையும்.

எனவே இத்தொழிற்சாலையை மீள இயங்க வைக்குமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

# அனுமதியின்றி மணல் ஏற்றிய இருவருக்கு தண்டப் பணம்

கிளிநொச்சி பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்ற இரண்டு பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டு மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி உழவு இயந்திரங்களில் மணல் ஏற்றிச் சென்ற இரண்டு பேரையும் கைது செய்ததுடன் இரு உழவு இயந்திரங்களையும் கைப்பற்றிய கிளிநொச்சி பொலிஸார் குறித்த இரண்டு பேரையும் இரு உழவு இயந்திரங்களையும் கடந்த 23 ஆம் திகதி பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த இரண்டு பேருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், மணலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (2)

# விபத்தில் இருவர் காயம்

(வவுனியா)

வவுனியா - வேப்பங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இந்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவிலிருந்து மன்னார் வீதியூடாக பயணித்த துவிச்சக்கரவண்டி மீது வேப்பங்குளம் சமுர்த்தி வங்கிக்கு அருகே அதே பாதையில் பயணித்த ஆட்டோ துவிச்சக்கர வண்டியின் பின்புறத்தில் மோதி விபத்துக்குள்ளாகியது.

விபத்தில் ஆட்டோச் சாரதியும் துவிச்சக்கர வண்டியைச் செலுத்திச் சென்ற முதியவரும் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா மற்றும் நெளுக்குளம் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

# பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு உதவி

முல்லைத்தீவில் தாய், தந்தையை இழந்த மாணவர்களுக்கு உதவித்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

வன்னி ஊடவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் போரின் போது தாய்,தந்தையை இழந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு கல்விக்கான மேலதிக செலவுகளுக்காக மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபா பணமாக நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பின் நிதியுதவியுடன் மாணவர்களுக்கு முதற்கட்ட நிதி கைவேலிப் பாடசாலையில் உறவினர் முன்னிலையில் 20 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதி ஆயிரத்து 500 ரூபா உதவிப்பணம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அவர்களின் படிப்புக்காலம் முடியும் வரை இந் நிறுவனத்தினால் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)




# கைக்குண்டுகள் அழிப்பு

வவுனியா மூன்றுமுறிப்பு பகுதியில் மீட்கப்பட்ட ஒரு தொகை கைக்குண்டுகள் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் அழிக்கப்பட்டுள்ளன.

மூன்றுமுறிப்பு பகுதியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் மீட்கப்பட்டிருந்த 8 கைக்குண்டுகளில் 6 கைக்குண்டுகள் விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்டதாக பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் குறித்த குண்டுகள் நீதிமன்ற உத்தரவுக்கமைய வெடிக்கவைத்து அழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# வரட்சி நிவாரணத்தில் பாரபட்சம்; தவசிக்குளம் மக்கள் ஆர்ப்பாட்டம்



வவுனியா கந்தபுரம் பிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட தவசிக்குளம் கிராம மக்கள் தங்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக தெரிவித்து முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

வவுனியா பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட தவசிக்குளம் கிராமத்தில் 756 குடும்பங்கள் வசித்துவரும் நிலையில் வெறும் 40 குடும்பங்களுக்கு மட்டுமே வரட்சி நிவாரணம் வழங்கப்படுவதாகவும், கிராமத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்து மக்கள் கிராம அலுவலர் அலுவலகத்திற்கு முன்னால் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்.

வரட்சி நிவாரணத்திற்கு தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் எனக் கூறப்படும் 40 பேரில் கூலி வேலை செய்பவர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

மக்களின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்த கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.கிருஸ்ணமூர்த்தி,

வவுனியா பிரதேச செயலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக வரட்சி நிவாரணமானது பயிர்கள் செய்து அழிவடைந்தவர்களின் விபரங்கள் கமக்கார அமைப்பினூடாக தெரிவு செய்து கிராம உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலகத்திற்கு வழங்கியிருந்தோம். தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என தெரிவித்தார். (2-250)

# 177 ஏக்கர் பயிர்ச்செய்கை வரட்சியினால் அழிவு

## கிளிநொச்சி மாவட்ட விவசாயப்பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சியில் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கை வரட்சியினால் 177 ஏக்கர் பயிர் செய்கை அழிவடைந்துள்ளதாக மாவட்ட விவசாயத் திணைக்கள பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் கடுமையான வரட்சி நிலையினால் கிளிநொச்சி மாவட்டத்தில் வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டு வந்த சிறுபோக செய்கைகள் பாதிக்கப்பட்ட நிலையில் இரணைமடு குளம், கல்மடுக்குளம், புதுமுறிப்புக்குளம், அக்கராயன் குளம், வன்னேரிக்குளம், குடமுறுட்டிக்குளம் உள்ளிட்ட குளங்களின கீழ் மூவாயிரம் ஏக்கர் வரையான நிலப்பரப்புக்களிலும் ஏனைய சிறிய நீர்ப்பாசனக்குளங்களின் கீழும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டன.

இதில் தொடர்ச்சியாக நிலவிய கடும் வரட்சி நிலை காரணமாக பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

கடந்த வாரம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த மாவட்ட விவசாயப்பணிப்பாளர் கடந்த வரட்சி காரணமாக 177 ஏக்கர் வரையான பயிர்ச்செய்கைகள் அழிவடைந் துள்ளன என்றும் இப்போகத்தின் போது ஓரளவு உப உணவுச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் தெரிவித்தார்.

எதிர்வரும் போகத்தின் போது கச்சான், உழுந்து, பயறு போன்ற பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீமத் கணேஷானந்த சுவாமிகளின் மறைவுக்கு இந்துமா மன்றம் அனுதாபம்

கிளிநொச்சி ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரமத்தின் குருமுதல்வர் ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகளின் மறைவையிட்டு அகில இலங்கை இந்துமா மன்றம் ஆழ்ந்த வருத்தமடைகிறது.

மகாதேவ ஆச்சிரமம் 1952ஆம் ஆண்டில் கிளிநொச்சி ஜெயந்திநகரில் தவத்திருவடிவேல் சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்டது. 1990ஆம் ஆண்டு ஆனி மாதம் 26 ஆம் திகதியன்று ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் சமாதியடைந்த போது மகாதேவ ஆச்சிரமத்தின் முதல்வராக ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் பொறுப்பேற்றுக் கொண்டார் என்பது வரலாற்றுப் பதிவு.

கிளிநொச்சி மக்களிடையே ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சைவ சமய மரபுகளைப் பேணும் வகையிலும் பல்வேறு சமய, சமூகப் பணிகளைச் செய்து வந்தார். போர்க்காலச் சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பராமரிப்பதற்கும், அவர்களுக்குச் சமய, கலாசார விழுமியங்களைப் போதிப்பதற்கும் சைவச் சிறுவர் இல்லத்தை ஆரம்பித்தார். வன்னேரிக் குளத்தில் யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தை ஆரம்பிப்பதற்கும் சுவாமிகளே காரணமாக இருந்துள்ளார்.

மகாதேவ ஆச்சிரமத்தின் முதல்வராக இருந்து ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் ஆற்றிவந்த ஆன்மீக, சமய, சமூகநலப் பணிகள் பெரிதும் போற்றுதற்குரியன என்பதுடன் அவை காலத்தால் மறக்கப்பட முடியாதனவாகும்.

சமாதி நிலையடைந்துள்ள ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகளின் ஆத்ம சாந்திக்கு இறையருளை வேண்டி மாமன்றத்தின் சார்பாக பிரார்த்தித்துக் கொள்கின்றோம். அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (2)

## ஸ்ரீமத் கணேஷானந்த சுவாமிகளின் மஹாசமாதி பேரிழப்பாகும்

கிளிநொச்சி, ஜெயந்திநகரிலுள்ள மகாதேவா ஆச்சிரமத்தின் இரண்டாவது குருபீடாதிபதி ஸ்ரீமத் கணேஷானந்த் மஹாதேவா சுவாமிகள் மஹாசமாதி அடைந்தமை எம்மவர்க்குப் பேரிழப்பாகி விட்டது. சைவ விழுமியப் பண்புகளும் தமிழுலகமும் சிறந்ததொரு வாழ்க்கை வாழ்ந்து வாழ்வில் ஈடேற வேண்டும் என்பதே அவரது வாழ்வின் பெருவிருப்பாய் இருந்ததென்பது யானறிந்த உண்மை. மஹாதேவா சைவச் சிறுவர் இல்ல ஸ்தாபகராய், இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயப் போசகராய், உருத்திரபுரம் சிவன் ஆலயப் போசகராய், முன்னாள் தலைவராய், பொறிக்கடவை அம்மன் ஆலய போசகராய், கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய ஆலோசகராய், முருகண்டீஸ்வரர் ஆலய ஆலோசகராய், திருநெறிக் கழக முன்னாள் தலைவராய் எனத் தன் வாழ்நாளையே சமயத்திற்காகவும் சமூக சேவைக்காகவும் அர்ப்பணித்த பெருமகனார் இன்று நம்மோடு இல்லை என்பதை மனம் உணர மறுக்க அவர் தம் சேவை எம்மோடு நிழலாடிக்கொண்டிருக்கின்றமையே காரணம். அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்பதற்கு எடுத்துக் காட்டாய் எத்தனை மழலைகள் வாழ்வு சுவாமி அவர்களின் சேவாலயத்தால் சுபீட்சமானது. ஆன்மீகச் சேவை உலகிற்குப் பேரிழப்பைத் தந்து பரப்பிரம்மத்தோடு சாந்நித்தியமாகிவிட்ட சுவாமிகள் ஆசியோடு அவர் தம் சேவை தொடர இறைவனை வேண்டி அமைகின்றேன் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். (2)

## இலவச கல்விக்கூடம் திறப்பு



(முல்லைத்தீவு)

புலம் பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக காணப்படும் கைவேலி மருதமடு கிராமத்தில் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கோடு இலவச கல்விக்கூடமாக காந்தள் அறிவுக்கூட திறப்புவிழா நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது

இந்நிகழ்வில் வடமாகாண சபை விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் தனது முதல் நிகழ்வாக கலந்து சிறப்பித்தார்

இந்நிகழ்வில் புலம்பெயர் உறவுகளால் பல்கலைக் கழக மாணவர்கள் இருவருக்கு தொடர்ச்சியாக மாதாந்தம் அவர்களது கல்வி நடவடிக்கைக்காக நிதி வழங்கும் செயற்பாடு இடம்பெற்றதோடு நீண்ட தூரம் நடந்து பாடசாலை செல்லும் மாணவர்கள் ஐந்து பேருக்கு துவிச்சக்கரவண்டிகளும் வழங்கி வைக்கப்பட்டன. (2-281)

## புகையிரதக் கடவை காப்பாளர்கள்

## ஜனாதிபதியை சந்திப்பதற்கு வவுனியாவிலிருந்து நடைபயணம்




வடக்கு புகையிரத கடவை காப்பாளர்கள் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி நேற்று நண்பகல் 12 மணியளவில் வவுனியாவிலிருந்து ஜனாதிபதியை சநந்திக்கும் நோக்கத்துடன் நடைபயணம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

வடக்கு- கிழக்கு புகையிரதக் கடவை காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.ஜே.ராஜ்குமார் தலைமையில் ஏழு உறுப்பினர்கள் இந்த நடை பயணத்தில் பங்கேற்றுள்ளனர்.

வவுனியா மத்திய பேருந்து தரிப்பிடத்திற்கு முன்னாலிருந்து ஆரம்பமான நடை பயணத்தினை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆரம்பித்து வைத்தார். இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு- கிழக்கு புகையிரதக்கடவை ஊழியர்களின் பிரச்சினைகள் மற்றும் அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என மத்திய போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டபோதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அத்துடன் 250 ரூபா ஊதியத்திற்கு அரசாங்கம் இந்த ஊழியர்களை அடிமைகள் போல் நடத்தி வருகிறது என குற்றஞ்சாட்டினார்.

நடை பயணத்தின் முன்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வடக்கு-கிழக்கு புகையிரதக் கடவை காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.ஜே.ராஜ்குமார்,

கடந்த நான்கு ஆண்டு காலமாக பொலிஸாரினதும் புகையிரத திணைக்களகத்தின் அதிகாரிகளினதும் பொய்யான வாக்குறுதிகளை நம்பி ஏமாற்றப்பட்டுள்ளோம் என குறிப்பிட்ட அவர் ஜனாதிபதியை சந்தித்து எங்களுக்கு நீதி வழங்க வேண்டும், எங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க வவுனியாவிலிருந்து கொழும்புக்கு எமது நடை பயணத்தை ஆரம்பித்துள்ளோம் என தெரிவித்தார். (2-250)

## நெல் உலரவிடுவதற்கு தளங்களை அமையுங்கள்

### விவசாயிகள் கோரிக்கை



கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் உலர விடும் தளங்கள் போதியளவில் இல்லாததன் காரணமாக விவசாயிகள் தமது நெல்லை வீதியில் உலர விடுகின்ற நிகழ்வுகள் தொடர்கின்றன.

கிளிநொச்சியில் இரண்டாவது பெரிய குளமான அக்கராயன் குளத்தின் கீழ் இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கை அறுவடை மேற்கொள்ளப்படும் நிலையில் விவசாயிகள் வீதியில் நெல்லை உலர விடுகின்ற நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது. இதன் காரணமாக வீதி விபத்துகள் ஏற்படுவதற்கான நிலைமைகள் உருவாகி இருப்பதாக போக்குவரத்தில் ஈடுபடும் மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற விவசாயக் கூட்டங்களில் நெல் உலர விடும் தளங்களை குறைந்தது கமக்கார அமைப்புகளுக்கு மூன்று என்ற வகையிலாவது அமைத்துத் தாருங்கள் என தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையிலும் அவை முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என சுட்டிக்காட்டப்படுகின்றது.

சிறு போக காலத்தில் குறைந்தளவு நெல்லினையே உற்பத்தி செய்யும் விவசாயிகள் நெருக்கடி நிலைமையினை எதிர்கொள்ளும் நிலையில் காலபோகத்தில் அதுவும் மழை வீழ்ச்சி இடம் பெறும் காலத்தில் நெல்லினை உலர விட முடியாத நிலையில் பச்சை நெல்லாகவே விற்பனை செய்கின்ற அவலம் காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டம் ஒரு விவசாய மாவட்டம் எனக் கூறிக் கொண்டு விவசாயிகளுக்கான முக்கியமான தேவைகள் நிறைவேற்றப்படாததன் காரணமாகவே பாரிய நெருக்கடியினை விவசாயிகள் எதிர்கொள்கின்றனர்.

எனவே மாவட்டத்தில் கூடுதலான நெல் உலர விடும் தளங்களை அமைத்துத் தருமாறு தொடர்ச்சியாக விவசாயிகள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். (2)




## மாவீரன் பண்டாரவன்னியன் நினைவு தினம் அனுஷ்டிப்பு





வவுனியாவில் மாவீரன் பண்டார வன்னியனின் 214 ஆவது நினைவு தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியாவில் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள தேசிய வீரன் பண்டாரவன்னியனின் நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

வன்னியின் இறுதி மன்னனாகிய பண்டார வன்னியன் பிரித்தானியருடன் போரிட்டு மடிந்தவனாவான். அவரை நினைவுகூறும் இந்நிகழ்வை வவுனியா நகர சபையும், பண்டார வன்னியன் நற்பணி மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. குறித்த பண்டார வன்னியுன் சிலை நிறுவுவதற்கு காரணமாக இருந்த ஜனாதிபதி சட்டத்தரணியும், மூத்த சட்டத்தரணியுமான மு.சிற்றம்பலம், மாவட்ட அரசாங்க அதிபர் எம்.பி. றோஹண புஸ்பகுமார, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ஜி.ரி.லிங்கநாதன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், வவுனியா வர்த்தகர் சங்க செயலாளர் ஜி. ஸ்ரீஸ்கந்தாராஜா, தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ். ஸ்ரீனிவாசன், பொது அமைப்பினர், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைத் தலைமையும் ஏழு சவால்களும்!

அ.தி.மு.கவில் இரட்டைத் தலைமை கூடாது, கட்சியும் ஆட்சியும் ஒருவரிடமே இருக்க வேண்டும். இந்த அரசியல் வாக்கியம்தான் ஓ.பன்னீர்செல்வத்தின் முதல்வர் பதவிக்கு உலை வைத்தது. அதுவே சசிகலாவின் வழியாக எடப்பாடி பழனிச்சாமியை முதல்வராக்கியது.



தற்போது கட்சி, ஆட்சி இரண்டிலுமே இரட்டைத் தலைமை உருவாகியிருக்கிறது. ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் என்று அறிவித்துக்கொண்டிருக்கும் எடப்பாடி பழனிச்சாமியும் ஓ.பன்னீர்செல்வமும் முறையே முதல்வராகவும் துணை முதல்வராகவும் தொடர்கிறார்கள். இந்த இரட்டைத் தலைமைக்கு முன்னால் ஏழு சவால்கள் இருக்கின்றன.

### 1. செம்மலையும் மூத்த அமைச்சர்களும்.

அ.தி.மு.க. அணிகள் இணைந்த பிறகு பதவியேற்கும் புதிய அமைச்சர்களில் செம்மலை முக்கியமானவராக இருப்பார் என்றுதான் பலரும் கணித்தனர். ஆனால், அந்தக் கணிப்பைத் தகர்த்து விட்டார் பழனிச்சாமி.



அதன் மூலம் அமைச்சரவைக்குள் அதிருப்தி உருவாகியிருப்பது கண்கூடு. கூடவே, மூத்த அமைச்சர்கள் செங்கோட்டையன், ஜெயக்குமார் முதல் புதியவர்களான உடுமலை ராதாகிருஷ்ணன், சேவூர் ராமச்சந்திரன் வரை பலரது முக்கியத் துறைகள் மாற்றப் பட்டிருப்பது அமைச்சரவைக் குள் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த அதிருப்திகளும் சலசலப்புகளும் விரிவடையாமல் தடுத்து நிறுத்துவதே முதல்வருக்கு இருக்கும் முதல் சவால். அதேபோல, மாநில, மாவட்டப் பொறுப்புகள், வாரியப் பதவிகளுக்காகக் காத்திருக்கும் எம்.எல்.ஏ.க்களும் முதல்வருக்கான சவால்களாகவே இருப்பார்கள். என்ன ஒன்று, அவர்கள் வெளியேறும் போது வெறுமனே செல்ல மாட்டார்கள். சசிகலாவையும் தினகரனையும் காரணமாகச் சொல்லி விட்டு அவர்கள் பக்கம் செல்வார்கள். அதுதான் சிக்கல்.

### 2. ஒரு உறை, இரு கத்திகள்!

ஊழலாட்சி என்று விமர்சித்த ஓபிஎஸ்ஸுடன் கை குலுக்கியிருக்கிறார் முதல்வர் பழனிச்சாமி.

இதனை எதிரியையும் அரவணைக்கும் பாணி அல்லது, எதிரிக்கு எதிரி நண்பன் என்று சொல்லலாம். எப்படிப் பார்த்தாலும் கட்சி, ஆட்சியில் இரட்டை அதிகாரமையங்களை உருவாக்கியிருக்கிறார் முதல்வர்.

இனி கட்சி, ஆட்சியின் முக்கிய முடிவுகள் அனைத்திலும் ஈபிஎஸ், ஓ.பி.எஸ். என்ற இருவருடைய பங்களிப்பையும் தவிர்க்க முடியாது. அந்த முடிவுகள் பரஸ்பரம் பலன் தரும்வரை பிரச்சினையில்லை. மாச்சரியங்கள் உருவானால், மனமாற்றங்கள் உருவாகும்.

கட்சியும் ஆட்சியும் ஒருவரிடமே இருக்க வேண்டும் என்று அறைகூவல் எழுப்புபவர்கள் பலரைக் கொண்ட கட்சி அ.தி.மு.க. அப்படியொரு குரல் எழுந்தால், அது ஆட்சி மாற்றத்துக்கும் அழைத்துச்செல்லும். அதைத் தவிர்க்க வேண்டிய பெரும்சவால் முதல்வருக்கு முன்னால் இருக்கிறது.

### 3. ஸ்லீப்பர்செல் சிக்கல்கள்

'எங்கள் எம்.எல்.ஏ.க்கள் எதிரணிக்குள் ஸ்லீப்பர் செல்களாக இருக்கிறார்கள்' என்ற தினகரனின் கூற்றை முதல்வர் பழனிச்சாமி எளிதாகக் கடந்துவிட முடியாது. தன் வசம் 19 எம்.எல்.ஏ.க்கள் இருப்பதைப் பகிரங்கமாகக் காட்டி விட்டார் தினகரன்.

இன்னும் ஓரிருவர் வெளியே வந்தால் அது ஆட்சிக்கான ஆபத்து. ஸ்லீப்பர்செல்களின் அடியொற்றி, வேறு சில அதிருப்தி எம்.எல்.ஏக்கள் தினகரன் பக்கம் நகர்ந்து, அவர்கள் எடப்பாடி அரசுக்கு அளித்து வந்த ஆதரவைத் திரும்பப் பெறுவதாக ஆளுநரிடம் முறைப்படி அறிவித்தால், எடப்பாடி அரசு எப்போது வேண்டுமானாலும் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டி வரும்.

அந்த 'எப்போது' என்பதை டில்லி முடிவு செய்யும் என்பது வெளிப்படை. ஆக, அதிருப்தி உருவாகாமல், ஸ்லீப்பர்செல்கள் [illegible] [illegible] பார்த்துக் கொள்வது முதல்வரின் முன்னால் இருக்கும் மற்றொரு சவால்.

### 4. ஸ்டாலினின் அடுத்த நகர்வு

"தேவைப்பட்டால், எடப்பாடி பழனிச்சாமி அரசின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவோம்" என்று கூறியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின். ஆனால் அந்தத் 'தேவைப்பட்டால்' என்பது தினகரன் பக்கம் திரளும் எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கையில்தான் இருக்கிறது.

இந்த இடத்தில், தினகரன் பயன்படுத்திய 'துரோகம்' என்ற வார்த்தையும், 'துரோகத்துக்குப் பதிலடி துரோகம் தான்' என்ற தினகரன் ஆதரவு முன்னாள் அமைச்சரின் கருத்தையும் இணைத்துப் பார்க்கும்போது, டில்லி ஆசியுடன் ஈபிஎஸ்ஸும் ஓபிஎஸ்ஸும் தங்களுக்கு எதிராக நடத்திக் கொண்டிருக்கும் அரசியல் ஆட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர, தினகரன் தரப்பு ஸ்டாலினின் உதவியை மறைமுகமாக நாடினாலும் வியப்படைய ஏதுமில்லை. அப்படி ஒன்று நடந்தால், அது எடப்பாடி அரசுக்கான முதன்மை நெருக்கடி.

### 5. இரட்டை இலை மீட்பு

இரட்டை இலையை மீட்டெடுக்க அணிகள் இணைப்பு காலத்தின் கட்டாயம். அதையே ஈபிஎஸ்ஸும் ஓபிஎஸ்ஸும் செய்திருக்கிறார்கள்.

ஆனால், அதுமட்டுமே போதாது. முக்கியமாக, டில்லி மனது வைக்க வேண்டும். ஆம், சமீபத்திய [illegible] சர்ச்சை [illegible] படி பார்த்தால், இரட்டை இலை எடப்பாடி - ஓ.பி.எஸ். இணைந்த அணிக்கே கிடைக்க வேண்டும். அதுதான் அளவு கோல் என்றால் ஆர்.கே.நகர் இடைத் தேர்தலின்போதே இரட்டை இலை சசிகலா அணிக்குக் கிடைத்திருக்க வேண்டும்.

ஆனால், அதைத் தேர்தல் ஆணையம் செய்யவில்லை. ஆக, இப்போதும்கூட சின்னம் தேர்தல் ஆணையம் கைகளில்தான் இருக்கிறது. எனவே, இரட்டை இலை இல்லாத தேர்தல்தான் அ.தி.மு.கவை எளிதாகக் கையாள உதவும். முக்கியமாக, தாமரைச் சின்னத்தைத் தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் கொண்டுசேர்க்க உதவும் என்று 'டில்லி' கணக்குப் போடும் பட்சத்தில், இரட்டை இலை மீட்பு கானல் நீர்தான்.

### 6. உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும்

ஆர்.கே.நகர் இடைத் தேர்தல் அறிவிப்பு வெளியானால், அதுதான் அ.தி.மு.கவுக்கான பெரிய சவால். அதை விடவும் ஆகப் பெரிய சவால் உள்ளூராட்சித் தேர்தல். இரட்டை இலை சின்னம்



இல்லாததால்தான் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த எடப்பாடி பழனிச்சாமி அரசு தயங்குகிறது என்ற குற்றச் சாட்டு தொடர்ந்து நிலுவையில் இருக்கிறது.

ஒருவேளை, இரட்டை இலைச்சின்னம் கிடைத்து அல்லது கிடைக்காமல், உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டி வந்தால், அதுவும்கூட ஒருவகையில் முதல்வருக்கான நெருக்கடிதான். ஆளுங்கட்சி செய்யும் குழப்படி அரசியலால் அதிருப்தியில் இருக்கும் மக்கள், உள்ளூராட்சித் தேர்தலில் ஆளுங்கட்சிக்குத் தோல்வியைக் கொடுக்கும் பட்சத்தில், அது எடப்பாடி அரசின் மீதான மதிப்பீடாகவே புரிந்து கொள்ளப்படும். அது, கட்சியிலும் ஆட்சியிலும் ஓபி.எஸ்ஸின் கைகளையே பலப்படுத்தும்.

### 7. சுழற்சி முறையில் முதல்வர் பதவி

இன்றைக்கு சசிகலாவையும் தினகரனையும் காட்டித் துணை முதல்வர் பதவியைப் பெற்றுள்ள ஓ.பி.எஸ், கடைசிவரை துணை முதல்வராக மட்டுமே நீடிப்பார் என்று சொல்ல முடியாது. மூன்று முறை முதல்வராக இருந்தவர், மக்கள் மத்தியில் ஓரளவு செல்வாக்கு பெற்றவர் என்ற முறையில் கட்சியிலும் ஆட்சியிலும் தனது ஆளுமையை விரிவுபடுத்த முதல்வர் பதவியைக்கூடக் கேட்கக்கூடும்.

முழுமையாக இல்லாவிட்டாலும், சுழற்சி முறையிலேனும் பகிர்ந்தளிக்கக் கோரலாம். அதற்கு டில்லியின் ஆதரவு கிடைத்தால், அதைச் செய்துதர வேண்டிய நெருக்கடி முதல்வருக்கு வரலாம். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றத் துணிந்தாலும் தவறினாலும் அது முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்குச் சிக்கலையே தரும்.

இந்த இடத்தில், துணை முதல்வராகப் பதவியேற்ற கையோடு ஓபி.எஸ்ஸுக்கு வந்த மோடியின் வாழ்த்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்வது பொருத்தம்.

ஆ. முத்துக்குமார்
தமிழக எழுத்தாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவுகளை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று நேரில் சென்று சந்தித்து கலந்துரையாடினார்.

(படங்கள்:-தும்பளைச் செய்தியாளர்)

# ஆட்சியை முடிவுக்கு கொண்டுவர மக்கள் ஒன்றிணைய வேண்டும்

## அநுர எம்.பி. கோரிக்கை



தேசிய அரசாங்கத்தின் பயணம் மோசமாக மாறியுள்ளதாகவும், பிரதான இரண்டு கட்சிகளுமே நாட்டை ஆளும் பொறுப்பை கைவிட்டு செயற்படுவதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

தேசிய அரசாங்கத்தின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வர மக்கள் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய அரசாங்கத்தின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வர மக்கள் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தேசிய அரசாங்கத்தில் எழுந்துள்ள குழப்பங்கள் மற்றும் அமைச்சர்களின் திடீர் மாற்றங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மக்களின் தேவைக்காகவும், ஊழல்மோசடிகள் அனைத்திலிருந்தும் மக்களையும் நாட்டையும் மீட்டு நல்லாட்சியை உருவாக்குவதாக கூறி ஆட்சிக்கு வந்த மைத்திரி-ரணில் கூட்டணி அரசாங்கம் ஆட்சி அமைத்து இரண்டு ஆண்டுகளில் நாட்டின் திசையை தவறான பக்கம் திருப்பி விட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகளில் பல்வேறு குழப்பங்கள் எழுந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர், சைட்டம் தனியார் கல்வியகம் மூடப்பட வேண்டும் என்ற எதிர்ப்புக் குரல் சகல தரப்பில் இருந்தும் எழுந்துள்ளதாகவும் தெரிவித்தார். (இ-7)

# வடக்கு மீன்வளம் குறித்து பேராசிரியர் சூசை உரை

வடமாகாண மீன்வளமும் பயன்பாடும்; எதிர் கொள்ளும் பிரச்சினைகளும் தொடர்பான விசேட உரை நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பொதுசன நூலக குவிமாடச் சிறிய கேட்போர் கூட்டத்தில் யாழ்.பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும்.

இதில் பேராசிரியர் சூசை ஆனந்தன் உரை நிகழ்த்துவார். (இ-10-102)

# நூல் வெளியீட்டு விழா

உலக இலக்கிய மேதை டென்மார்க் அனசனின் வாழ்க்கை வரலாற்றையும் அனசனின் காலத்தை வென்ற சிறுகதைகளையும் தமிழாக்கம் செய்த தர்மன் தர்மகுலசிங்கத்தின் இரு நூல்களின் வெளியீடும் மணிவிழாச் சிறப்பு நிகழ்வும் நாளை மறுதினம் 28 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப.3.30 மணிக்கு யாழ். கரவெட்டி திருஇருதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (இ-60)

# கட்சி பேதங்களை கடவுளே வந்தாலும் தீர்த்துவிட முடியாது

## அமைச்சர் ஹக்கீம் கவலை

அரசாங்கத்திலுள்ள கட்சிகளிடையே காணப்படும் பேதங்களை கடவுளே வந்தாலும் தீர்க்க முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கடுவெலவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் ஹக்கீம் இதனைக் கூறினார். இக்கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் சுஜீவ சேனசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கும் இடையில் கருத்து மோதல்கள் இடம்பெற்றன. இதனையடுத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.



பிரதான கட்சிகளிடையே காணப்படும் கருத்து முரண்பாடுகளை இன்றும் நாம் மேடையிலும் கண்டோம். இது தவிர்க்க முடியாதது. இதுதான் யதார்த்தம் எனவும் அமைச்சர் மேலும் கூறினார். (இ-7)

# தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள பதவி விலகுகின்றனர்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு




திருடர்கள் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள பதவிவிலகுகின்றனர் என ஜே.வி.பி.யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அரசாங்கம் திருடர்களை பாதுகாக்கும் நோக்கிலேயே செயற்பட்டு வருவதாகவும் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் சிரத்தை காட்டவில்லை எனவும் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்காக ஜனாதிபதியும் பிரதமரும் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு அரசாங்கம் தண்டனை வழங்குவதற்கு முனைப்புக் காட்டாது என்றும் அவர்களை தண்டனையிலிருந்து தப்பிக்கச் செய்வதில் கூடுதல் ஆர்வம் காட்டி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரயன் ஜயலத்தின் மறியல் நீடிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவ செயற்பாட்டாளர்கள் குழுவின் இணைப்பாளர் ரயன் ஜயலத்தை எதிர்வரும் செப்டெம்பர் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாவத்தை நீதவான் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி வழக்கு விசாரணையின் போது அவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாமை தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடம் விளக்கம் கேட்ட நீதிபதி, உடனடியாக கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்டிருந்தார்.

மாளிகாவத்தை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொதுமக்களுக்கு குந்தகம் ஏற்படும் வகையில் [illegible] குற்றம் சுமத்தப்பட்ட மருத்துவ பீட மாணவ செயற்பாட்டுக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ரயன் ஜயலத் உள்ளிட்ட ஐந்து பேரை கைது செய்வதற்கு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் இதற்கு முன்னர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புதையல் தோண்டிய ஐவர் கைதாகினர்

மட்டக்களப்பில்; காஞ்சிரங்குடா பகுதியில் புதையல் தோண்டிய சந்தேகத்தின் அடிப்படையில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் அலியார்குளம்- இடும்பன்வட்டை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, புதையல் தோண்டுவதற்காக பூஜை வழிபாடுகளுக்கு பயன்படுத்தப்பட்ட பூஜை பொருட்கள் மற்றும் புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களும் கைப்பற்றப்படுள்ளன. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளுக்கு நாள் அதிகரிக்கும் மோதல்



அ.தி.மு.க.வில் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான ஒன்றுபட்ட அ.தி.மு.கவினருக்கும், டி.டி.வி. தினகரனுக்கும் இடையே ஏற்பட்டுள்ள மோதல் நாளுக்கு நாள் அதிகரித்தப்படி உள்ளது.

அ.தி.மு.கவை முழுமையாக தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கும் டி.டி.வி.தினரகனும், அவர் உறவினர்களும் முதலமைச்சர் பதவியில் இருந்து எடப்பாடி பழனிச்சாமியை எப்படியாவது நீக்கி விட வேண்டும் என்ற முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் டி.டி.வி.தினகரனையும் அவரது மன்னார்குடி உறவினர்களையும் அ.தி.மு.கவில் இருந்து விலக்கி வைக்கும் நடவடிக்கைகளில் எடப்பாடி பழனிச்சாமியும், ஓ.பன்னீர்செல்வமும் ஓசையின்றி ஈடுபட்டுள்ளனர்.

எடப்பாடி பழனிச்சாமியும் ஓ.பன்னீர்செல்வமும் ஒன்றிணைந்ததால் கடும் அதிருப்தியும் ஆத்திரமும் அடைந்துள்ள டி.டி.வி. தினகரன் தனது ஆதரவாளர்களான 19 எம்.எல்.ஏக்களையும் கடந்த செவ்வாய்க்கிழமை ஆளுநரை சந்திக்க வைத்து கடிதம் கொடுக்க வைத்தார்.

அந்த கடிதத்தில், "முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மீது எங்களுக்கு நம்பிக்கை போய் விட்டது. எனவே அவருக்கு கொடுக்கும் ஆதரவைத் திரும்பப் பெறுகிறோம். அவருக்கு பதில்வேறு முதல்வரை தேர்வு செய்ய வேண்டும்" என்று கூறியிருந்தனர்.

இதற்கு எப்படி பதிலடி கொடுப்பது என்று எடப்பாடி பழனிச்சாமியும், ஓ.பன்னீர் செல்வமும் கடந்த இரண்டு நாட்களாக ஆலோசனை நடத்தினார்கள். அப்போது 19 எம்.எல்.ஏக்களுக்கும் அதிர்ச்சி வைத்தியம் அளிக்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி அந்த 19 எம்.எல். ஏக்களுக்கும் சபாநாயகர் தனபால் நேற்று முன்தினம் நோட்டீஸ் அனுப்பினார். அதில் அவர், "கட்சி தலைமைக்கு எதிராக செயற்படுவதால் எம்.எல்.ஏ.பதவியில் இருந்து உங்களை ஏன் தகுதி நீக்கம் செய்யக் கூடாது? இதற்கு ஒரு வாரத்துக்குள் விளக்கம் அளிக்க வேண்டும்" என்று உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து 19 எம்.எல். ஏக்களின் பதவியை பறிக்கும் பட்சத்தில் தமிழக அரசியல் களத்தில் அடுத்து என்னென்ன மாற்றங்கள் நடக்கும் என்ற பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள இந்த நடவடிக்கை கை கொடுக்கும் என்று ஒருசாரார் சொல்கிறார்கள்.

ஆனால் 19 எம்.எல். ஏக்கள் நீக்கப்பட்டு, இடைத் தேர்தல் நடந்தால் அதில் தி.மு.க. வென்று ஆட்சியையும் கைப்பற்றி விடும் என்று மற்றொரு சாரார் சொல்கிறார்கள். இந்த இரண்டில் எது நடக்கும் என்பது அரசியல் வட்டாரத்தில் அலசி ஆராயப்பட்டு, விவாதிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் டி.டி.வி. தினகரனை ஆதரிக்கும் 19 எம்.எல்.ஏக்களை சபாநாயகர் தனபால் நீக்க முடியாது என்று அரசியல் அனுபவம் வாய்ந்த மூத்த தலைவர்களும், சட்ட நிபுணர்களும் கருத்து தெரிவித்துள்ளனர்.

19 எம்.எல்.ஏக்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்க இயலாது என்பதற்கான காரணத்தையும் சட்ட விதிமுறைகளையும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (8)

பாரதச் செய்தி

# நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தாவிட்டால் ஜனாதிபதியிடம் முறையிடுவோம்-ஸ்டாலின்



(சென்னை)

நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தாவிட்டால் ஜனாதிபதியிடம் முறையிடுவோம் என்று தி.மு.க. செயல் தலைவரும் தமிழக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவருமான மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. செயல் தலைவரும், தமிழக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவருமான மு.க.ஸ்டாலின் நேற்று, முன்தினம் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது இந்த அரசு மீது நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த ஆளுநர் இதுவரை உத்தரவிடாமல் இருப்பது பற்றி உங்கள் கருத்து என்ன? என்று நிருபர்கள் கேட்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏற்கனவே 19 சட்டமன்ற உறுப்பினர்கள் எடப்பாடி பழனிச்சாமி மீது நம்பிக்கை இல்லை, எனவே முதலமைச்சரை மாற்ற வேண்டும் என்று ஆளுநரிடம் தனித்தனியாக கடிதம் கொடுத்து இருக்கிறார்கள். அதையொட்டி, எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் தி.மு.க. சார்பில், இந்த அரசு பெரும்பான்மை நடத்தக்கூடிய வகையில் உடனடியாக சட்டசபையை கூட்ட உத்தரவிட வேண்டுமென்று ஆளுநருக்கு, நான் கடிதம் அனுப்பி இருக்கிறேன்.

அந்தக் கடிதம் அனுப்பப்பட்டு 3 அல்லது 4 நாட்கள் கடந்தும் உரிய விளக்கமோ, பதிலோ எங்களுக்கு வரவில்லை. எனவே, இன்னும் ஓரிரு நாட்கள் பொறுத்து இருந்து பார்த்துவிட்டு, அப்போதும் பதில் வரவில்லை என்று சொன்னால், ஜனாதிபதியிடம் இதுகுறித்து முறையிடும் சூழ்நிலை உருவாகும். தேவைப்பட்டால் நீதிமன்றத்தையும் நிச்சயம் நாடுவோம் என்றார்.

மேலும் இந்த குதிரை பேர ஆட்சியை அப்புறப்படுத்த வேண்டுமென்று நாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஊடகங்கள் இந்தச் செய்தியை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார். (8)

# எடப்பாடி அரசை கலைக்கக்கோரி டிராபிக் ராமசாமி உண்ணாவிரதம்



முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அரசை கலைக்க கோரி சமூக ஆர்வலர் டிராபிக் ராமசாமி திடீரென உண்ணாவிரதம் இருந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

சமூக ஆர்வலர் டிராபிக் ராமசாமி அலுவலகம் சென்னை பிராட்வே பிரகாசம் வீதியில் உள்ளது. நேற்றுக் காலை 9 மணி முதல் அவர் தனது அலுவலகத்தில் உண்ணாவிரதம் இருந்து வருகிறார். இந்த திடீர் உண்ணா விரதம் பற்றி அவர் தெரிவித்ததாவது,

தமிழகத்தில் பெரும்பான்மை இல்லாத சிறுபான்மை அரசு நடக்கிறது. எடப்பாடி பழனிச்சாமி தாமாகவே முன் வந்து பதவியை ராஜினாமா செய்திருக்க வேண்டும். ஆனால் அவர் அதை செய்யவில்லை. ஜனநாயகத்துக்கு விரோதமாக குதிரை பேரம் நடக்கிறது. இந்த ஆட்சி உடனே அகற்றப்பட வேண்டும்.

இன்னும் 24 மணி நேரத்தில் இந்த ஆட்சியை கலைக்க வேண்டும். இல்லாவிட்டால் தலைமை செயலகம் அல்லது ஆளுநர் மாளிகை முன்பு எனது உண்ணாவிரத போராட்டத்தை தொடர்வேன் என்றார்.

டிராபிக் ராமசாமி எந்த இடையூறும் இல்லாமல் தனது அலுவலகத்தில் உண்ணாவிரதம் இருந்து வந்தாலும் அசம்பாவிதம் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. (8)

# பேரறிவாளனுக்கு பரோல்

## ஸ்டாலின் வரவேற்பு

ராஜீவ் கொலை குற்றவாளிகளில் ஒருவரான பேரறிவாளனுக்கு பரோல் வழங்கி தமிழக அரசு உத்தரவிட்டது. இது தொடர்பாக தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் கூறியது, பேரறிவாளனுக்கு பரோல் வழங்க உத்தரவிட்டதை வரவேற்கிறேன். பரோலை நீட்டிக்க வேண்டும் என பேரறிவாளன் கோரிக்கை வைத்தால் அதனை தமிழக அரசு பரிசீலிக்க வேண்டும். நிரந்தரமாக விடுதலை செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (8)

# உண்மை தொண்டருக்கே இனி அ.தி.மு.கவில் பதவி

## திவாகரன் தெரிவிப்பு



(டில்லி)

அ.தி.மு.கவில் உண்மையான தொண்டருக்கே இனி பதவி வழங்கப்படும் என திவாகரன் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளராக எஸ். காமராஜ், தஞ்சை தெற்கு மாவட்ட செயலாளராக சேகர் ஆகியோர் அ.தி.மு.க அம்மா அணி துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரனால் கடந்த புதன்கிழமை அறிவிக்கப்பட்டனர்.

அவர்கள் 2 பேரும் சசிகலாவின் சகோதரர் திவாகரனை தங்களது ஆதரவாளர்களுடன் சந்தித்தனர்.

அ.தி.மு.கவில் தற்போது துரோகிகளை எடுக்கும் படலம் தொடங்கியுள்ளது. இனி மேல் கட்சியிலும், ஆட்சியிலும் உண்மை தொண்டருக்கு தான் பதவி வழங்கப்படும்.

முதுகில் குத்திய துரோகிகளின் செயலை மறந்து விடுவோம். அவரவர் வசிக்கும் பகுதிகளில் கட்சியை பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். கட்சிக்கு புது இரத்தம் பாய்ச்சப்பட்டுள்ளது.

நான் நேரடியாக அரசியலில் இறங்கி கட்சி வளர்ச்சிக்கு பாடுபடப் போகிறேன் என்றார். (8)

# தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்களிடம் விளக்கம் கேட்கிறார் சபாநாயகர்



முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக்கொள்வதாக கூறிய தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் 19 பேரிடம் விளக்கம் கேட்டு சபாநாயகர் தனபால் நோட்டீஸ் அனுப்பி உள்ளார்.

முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக்கொள்வதாக டி.டி.வி. தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் 19 பேர் ஆளுநரிடம் கடிதம் கொடுத்துள்ளனர்.

இதனால் அவர்களை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என சபாநாயகருக்கு அரசு கொறடா ராஜேந்திரன் பரிந்துரை செய்துள்ளார்.

கட்சித்தாவல் தடைச் சட்டத்தின்படி அவர்களை தகுதி நீக்கம் செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த உத்தரவு தங்களை கட்டுப்படுத்தாது என்கின்றனர் தினகரன் ஆதரவு எம்.எல். ஏக்கள்.

இந்நிலையில், அரசு கொறடா பரிந்துரையை ஏற்று, தினகரன் ஆதரவு எம்.எல். ஏக்கள் 19 பேரிடமும் விளக்கம் கேட்டு சபாநாயகர் தனபால் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். 7 நாட்களில் அவர்கள் விளக்கம் அளிக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் விளக்கம் அளிக்க தவறினாலோ, விளக்கம் திருப்தி இல்லை என்றாலோ அவர்களை தகுதிநீக்கம் செய்வது தொடர்பாக சபாநாயகர் முடிவு எடுக்கலாம். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலச்சரிவில் சிக்கி 500 பேர் பலி!





## அரசு அதிகாரபூர்வ அறிவிப்பு

மேற்கு ஆபிரிக்க நாடான சியாரா லியோனில் கனமழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி 500இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதாகவும், 810இற்கும் மேற்பட்டவர்கள் மாயமாகியுள்ளதாகவும் அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடான சியாரா லியோனில் கடந்தசில வாரங்களாக கனமழை பெய்து வருகின்றது. இதனால், அந்நாட்டின் தலைநகரில் உள்ள மலைப்பகுதியில் பெருமளவில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில், சுமார் 2000இற்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணில் புதைந்துள்ளதாகவும் 300 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியிருக்கலாம் எனவும் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், 500 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளனர் என அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. மேலும், 800 இற்கும் அதிகமானோரின் நிலை இன்னும் தெரியவில்லை எனவும் அறிவித்துள்ளது.

பலியானவர்களில் 159 குழந்தைகளும் அடங்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. மாயமானவர்களின் கதி என்னவென்று தெரியாத நிலை அங்கு ஏற்பட்டுள்ளது. இதனால், மீட்புப்பணிகளுக்காக சர்வதேச உதவிகளை அந்நாட்டின் ஜனாதிபதி பட்மடா கமாரா கோரியுள்ளார். (8)

# சொகுசு கப்பல் கவிழ்ந்து விபத்து

## 22 பேர் பலி

(பிரெசில்லா)

பிரேசில் நாட்டின் பஹியா மாநிலத்தில் உள்ள கடல் பகுதியில் 130 பயணிகளுடன் சென்ற சொகுசு கப்பல் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் பலியானதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரேசில் நாட்டின் கடலோர மாநிலமான பஹியாவில், நேற்று 130 பயணிகளுடன்சொகுசு கப்பல்சென்றுள்ளது. நடுக்கடலில் சென்று கொண்டிருக்கும் போது திடீரென கப்பல் எதிர்பாராத விதமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 22 பேர் பலியானதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடற்படையினரால் 20இற்கும் அதிகமானோர் மீட்கப்பட்டுள்ளதாகவும் மீதம் உள்ளவர்களை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த புதன்கிழமை அந்நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள பார் மாநிலத்தில் 70 பயணிகளுடன் சென்ற படகு விபத்துக்குள்ளானதில் 21 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

படகு விபத்தில் பலியானவர்களுக்காக அம்மாநிலத்தில் மூன்று நாட்கள் துக்கம் கடைப்பிடிக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. ஒரே வாரத்தில் இரண்டு படகு விபத்துக்கள் நடந்துள்ளதால், இது குறித்து விசாரணை நடத்த அரசு உத்தரவிட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (8)

# பொலிஸ்- முஸ்லிம் கிளர்ச்சியாளர்கள் இடையேயான மோதலில் 12 பேர் பலி

(யாங்கூன்)

மியன்மாரில் ரோஹிங்யா முஸ்லிம் கிளர்ச்சியாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 5 பொலிஸார் உட்பட 12 பேர் பலியாகியுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.




மியன்மார் நாட்டில் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்து ஜனநாயக முறைப்படி கடந்த ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடந்தது. அதில் ஆங் சான் சூகியின் ஜனநாயகத்துக்கான தேசிய கட்சி (என். எல்.டி.) இரு சபைகளிலும் 80 சதவீதத்துக்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றியது.

மியன்மாரின் வடக்குப் பகுதியான ரக்கினேவில் சிறுபான்மை ரோஹிங்யா இன முஸ்லிம்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். பங்களாதேஷ் நாட்டில் இருந்து குடிபெயர்ந்து மியன்மாரில் பத்து இலட்சத்துக்கும் அதிகமானமக்கள் தொகையை கொண்டவர்களாக இருக்கும் இவர்களில் சிலர், கடந்த 2012 ஆம் ஆண்டில் இருந்து ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைக்கு எதிராக ஆயுதம்தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இராணுவ நடவடிக்கைக்கு பயந்து சுமார் 87 ஆயிரம் ரோஹிங்யா முஸ்லிம்கள், பங்களாதேஷத்திற்கு தப்பியோடி உள்ளனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் ரக்கினேவில் உள்ள 24 சோதனைச்சாவடிகள் மீது கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதன்பின்னர் அப்பகுதியில் உள்ள இராணுவ தளத்திற்குள் அத்துமீறி நுழைய முயற்சி செய்துள்ளனர். இந்த சம்பவங்களை தொடர்ந்து, பொலிஸாருக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் சுமார் ஐந்து பொலிஸாரும், ஏழு கிளர்ச்சியாளர்களும் கொல்லப்பட்டதாக அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. (8)

# லடாக் அருகே சாலை அமைக்கும் இந்தியா

## சீனா கடும் கண்டனம்

(பீஜிங்)

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் லடாக்கில் உள்ள பான்காங் ஏரியின் அருகே இந்தியா சாலை அமைத்து வருவதற்கு சீனா கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் சிக்கிம் மாநிலத்தில் உள்ள டோக்லாமில் சீனப் படைகள் ஊடுருவலை தடுக்கும் வகையில் இந்திய இராணுவத்தினர் எல்லையில் குவிக்கப்பட்டுள்ளனர். அதேபோல், சீனப் படையினரும் தங்களது இராணுவத்தினரை அங்கு நிறுத்தியுள்ளதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இது கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக நீடித்து வருகிறது.

இந்நிலையில், காஷ்மீர் மாநிலம் லடாக் பகுதியில் இருக்கும் பான்காங் ஏரி அருகே சாலை அமைப்பதற்கு இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்கு சீனா கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் கூறுகையில், லடாக்கில் உள்ள பாங்டாங் ஏரியின் அருகே இந்திய அரசு சாலை பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதனால், அந்தப் பகுதியில் அமைதி ஏற்படும்வாய்ப்புகளே இல்லை. இந்தியாவின் இந்த நடவடிக்கைக்கு சீனா கடும்கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறது எனகூறியுள்ளார். (8)




# ஐ.எஸ்.தீவிரவாதிகள் தாக்குதலில் 34 இராணுவ வீரர்கள் உயிரிழப்பு

சிரியாவில் கூட்டுப்படையினர் மீது ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 34 பேர் பலியாகி உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.



சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் ஜிஹாதி குழுவினர் நாட்டின் பல பகுதிகளை கையகப்படுத்தி, தங்களது ஆதிக்கத்தின்கீழ் வைத்து நிர்வகித்து வருகின்றனர். இதுதவிர, ஐ.எஸ். தீவிரவாதிகளும் சில பகுதிகளை கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். இந்த குழுக்களையும் வேட்டையாட அமெரிக்க விமானப் படையின் துணையுடன் அந்நாட்டு முப்படைகளும் தீவிரமாக போரிட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற சண்டையில் ஐ.எஸ். தீவிரவாதிகள் சில பகுதிகளை கூட்டுப்படையினரிடம் இருந்து கைப்பற்றினர். இந்நிலையில், ராகா மாகாணத்திற்கு கிழக்கு பகுதியில் கூட்டுப்படையினர் மீது ஐ.எஸ் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 34 இராணுவவீரர்கள் பலியாகி உள்ளனர் என அங்குள்ள மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது. (8)

# ஐ.எஸ்ஸிடமிருந்த பெரும்பான்மை பகுதிகளை ஹெஸ்புல்லா படையினர் மீட்டனர்

(பெய்ரூட்)

சிரியா மற்றும் லெபனான் நாட்டு எல்லையில் முகாமிட்டுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் வசமுள்ள பெரும்பான்மை பகுதிகளை ஹெஸ்புல்லா போராளிகள் மீட்டுள்ளனர்.



சிரியா படைகளுடன் லெபனானைச் சேர்ந்த ஹெஸ்புல்லா போராளிகளும் கடந்த வாரம் இணைந்து உள்நாட்டில் ஐ.எஸ். தீவிரவாதிகளை வேட்டையாடும் பணியில் களமிறங்கியுள்ளனர்.

அதேவேளையில், சிரியா படைகளுடன் சேராமல் லெபனான் நாட்டு எல்லைப்பகுதியில் அந்நாட்டு இராணுவம் ஐ.எஸ். தீவிரவாதிகள் பதுங்கியுள்ள இடங்களை குறிவைத்து ஆவேச தாக்குதலை தொடங்கியுள்ளது.

இந்நிலையில், சிரியா-லெபனான் எல்லைப்பகுதியை ஒட்டியுள்ள கலாமோன் பகுதிக்குள் முன்னேறிச்சென்ற ஹெஸ்புல்லா கூட்டுப் படையினர் ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருந்த 270 சதுர கிலோமீற்றர் பரப்பளவு நிலப்பகுதியைக் கைப்பற்றியுள்ளனர். மீதியுள்ள 40 சதுர கிலோமீற்றர் பகுதியையும் மீட்பதற்காக உச்சகட்ட தாக்குதல் நடைபெற்று வருகிறது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டு வந்தாலும் நான் வெற்றி பெறுவேன்

## ராஜித அதிரடி அறிவிப்பு



(கொழும்பு)

சுகாதார அமைச்சரான ராஜித சேனாரட்னவிற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியினரால் பாராளுமன்றத்தில்வைத்து நம்பிக்கையில்லா பிரேரணையொன்று சபாநாயகர் கரு ஜயசூரியவிடம்கையளிக்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் ஊடகங்களை சந்தித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் ராஜித சேனாரட்ன,

எனக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியினை சேர்ந்த 39 பேர் கையொப்பமிட்டு நம்பிக்கையில்லாப் பிரேரணையை கையளித்துள்ளனர். குற்றங்கள் இல்லாமையாலும், அறியாமையின் நிமித்தமாக குறித்த நம்பிக்கையில்லா பிரேரணை கையளிக்கப்பட்டுள்ளது.

நான் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவிற்கு மூன்று முறை ஆஜராகி வாக்கு மூலம் அளித்துள்ளேன். அதனால் குறித்த நம்பிக்கையில்லா பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றங்களைகண்டு நான் வியப்படைகின்றேன்.

நான் நீதிக்கு மதிப்பளித்து என்வேலையினை செய்து வருகின்றேன். கடந்த ஆட்சியின் போது ஊழல் குற்றங்களில் ஈடுபட்ட குழு வினர் இணைந்து எனக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையினை முன் வைத்துள்ளனர். கடந்த அரசாங்கத்திற்கு எதிராக நாம் முன்னெடுத்த நடவடிக்கைகள் இன்னும் நிறைவடையவில்லை.

மக்களுக்கு விழிப்புணர்வினை கொண்டுவர கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி முதல் நான் பணியாற்றி வருகின்றேன். ஒரு நம்பிக்கையில்லா பிரேரணையல்ல, 10 நம்பிக்கையில்லாப் பிரேரணையினை கொண்டுவந்தாலும் ஊழல் மற்றும் மோசடிகளை இல்லாது ஒழிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும்.

நான் நம்பிக்கையில்லாப் பிரேரணையியில் இலகு வில் வெற்றி பெறுவேன். இதற்கு ஆளும் கட்சியின் அனைத்து உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும் என்று ராஜித மேலும் தெரிவித்தார். (இ-7)

# மகிந்த ராஜபக்ஷவுக்கு பைத்தியம்

## அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க விசனம்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே கட்சியின் தலைமை பதவியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கியிருந்தார். தற்போது தான் பதவியை வழங்கவில்லை என்கிறார். எனவே அவருக்கு பைத்தியம் என்றே கூறவேண்டும் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

வெள்ளவத்தையிலுள்ள கண் வைத்தியசாலை ஒன்றினை நேற்று முன்தினம் மாலை மேற்பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் பின்னர் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் வீட்டில் சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்களின் சந்திப்பொன்று இடம் பெற்றது. அதன்போதுதான் சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் மாற்றப்படுமா இல்லையா என்பது குறித்து பேசப்பட்டது. அதன்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கட்சியின் தலைமைத்துவத்தை ஜனா திபதி மைத்திரிபால சிறிசேனவிடத்தில் வழங்குவதாக கூறினார். அப்போதைய கட்சியின் செயலாளராகவிருந்த அமைச்சர் சுசில் பிரேமஜயந்த விடத்தில் அவசரமாக தலைமைத்துவத்தை மாற்றும் பத்திரத்தில் கைச் சாத்திடுங்கள் என்றும் பணித் தார். எனவே தற்போது தன்னையாரும் விலக்கவில்லை. தானே கட்சியின் தலைவர் என்று கூறுகின்றார். எனவே அவருக்கு பைத்தியம் பிடித்துள்ளதோ என்று எனக்கு சந்தேகம் தோன்றுகின்றது. அதனால்தான் அவரே வழங்கிய தலைமைத்து வத்தை தற்போது இல்லை என்று மறுக்கின்றார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் கிளர்ச்சிகள் கிடையாது

## அமைச்சர் நவீன் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் கிளர்ச்சிகள் கிடையாது என பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற இளைஞர் சக்தி நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேறு நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது இலங்கையில் பாரியளவில் கிளர்ச்சிகள் இடம்பெறுவதில்லை.

நாட்டின் இருதயம் போன்றவர்களே இந்த இளைஞர் சமூகத்தினர். தலைவர்கள் அவர்களுக்கு உரிய வளங்களை வழங்கினால் நாடு முன்னோக்கி நகரும். இளைஞர் கழகங்களின் ஊடாக இளம் தலைவர்கள் உருவாகின்றனர்.

இவ்வாறான தலைவர்கள் முன்மாதிரியாக செயற்பட வேண்டும். பிரதேச சபை. பிரதேச செயலகம் போன்றவற்றில் ஏதேனும் ஓர் பணியை செய்ய வேண்டியேற்பட்டால் பணம் கொடுக்க வேண்டியுள்ளது.

இளைஞர், யுவதிகளின் கைகள் சுத்தமாக இருக்க வேண்டும். அவர்கள் முன்னுதாரணமாக இருக்க வேண்டும் ஏனெனில் அவர்களே நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்றுக் கொள்ள உள்ளவர்கள் என அமைச்சர் நவீன் திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கிழக்கு பல்கலை.வளாகத்தில் பதற்றம்

மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக் கழக வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அனைத்து மாணவர்களையும்வெளியேறுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை வரை வெளியேறாமல் பல்கலைக்கழக நிர்வாக கட்டடத் தொகுதியில் அனுமதியின்றி தங்கியிருக்கும்மாணவர்களுக்கும் காவலாளிக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வளாகத்தில் தரித்து நிற்கும் மாணவர்ககளில் ஒருவர் சுகயீன முற்ற நிலையில் அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்காக ஆட்டோவை பல்கலைக்கழக வளாகத்திற்குள் கொண்டு செல்ல முற்பட்ட போதே மாணவர்களுக்கும் காவலாளிக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து பொலிஸார் வரவழைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## வராத கடனை வசூல் செய்வது எப்படி?

கடன் வாங்கிய பலருக்கு புதுப்புதுத் தேவைகளும் செலவுகளும் வந்து விடுவதால் கடன் விடயத்தில் வரட்டும் பார்க்கலாம். என்கிற மனநிலையில் இருக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் இவர்கள் மனமுவந்து கடனைத் திரும்பத் தருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

போதாக்குறைக்கு கடன் கொடுத்தவர்கள், பொறுமையிழந்து அவசரப்பட்டு அவர்களை வாய்க்கு வந்தபடி பேசியும் அவமானப்படுத்தியும் விடுகிறார்கள். இந்தத் தவறுகளை ஒரு போதும் செய்யவே கூடாது, இவற்றைச் செய்தால் தலைகீழாக நின்றாலும் நடந்து நடந்து எத்தனை ஜோடி செருப்பைத் தேய்த்துத் தீர்த்தாலும் பணம் வசூலாகாது.

கடன் வாங்கியவர்கள் இன்னோர் உத்தியையும் கையாளுகிறார்கள். அது கடன் கொடுத்தவர்களைக் களைப்படையச் செய்வது. அதாவது பல தவணைகளைச் சொல்லி இழுத்தடிப்பது அதில் பெரும்பாலும் கடன் கொடுத்தவர்கள் தோற்றுப்போய் இனி வசூலாகாது என்கிற முடிவுக்குச் சீக்கிரமே வந்து விடுகிறார்கள். இத்தகைய மனநிலை கொடுத்தவர்களுக்கு வந்துவிட்டது என்பதைத் தெரிந்து கொண்டதும் தான் இனிப் பணத்தைத் திரும்பக் கொடுப்பதில்லை என்கிற தீர்மான முடிவுக்குப் பணம் வாங்கிய வர்கள் வந்து விடுகிறார்கள்.

வேறு வகையில் சொல்வது என்றால் பணம் கொடுத்தவர்கள் ஒரு போதும் இனிப் பணம் வசூலாகாது என்கிற முடிவுக்குச் வரவே கூடாது. (வந்தாலும்வெளியில்காட்டிக் கொள்ளலாகாது) இந்த உறுதிப்பாடு ஒன்றே பணத்தை நமக்கு வசூல் செய்து தந்து விடும்.

கடனை வசூல் செய்யும் வழிமுறைகளை இனி வேகமாகப் பார்ப்போம். அவர்கள் சௌகரியத்திற்குத் ஒரு தவணைகளை அனுமதிக்க வேண்டும். கடன்காரர்கள் சொல்லும் ஒரு தவணையைக்கூட விட்டு விடக்கூடாது. எத்தனை முறை இழுத்தடித்தாலும் சாக்குப் போக்கு சொன்னாலும் களைத்துவிடாமல் போய்விட வேண்டும். வட்டித் தொகைகளையோ அசலையோ குறைத்துக் கொள்ளவோ விட்டுத்தருவதாகவோ சொல்ல வேண்டும். நமக்கு இருக்கும் கஷ்டங்களையும் சொல்லி வேறு வழியில்லாமல்தான் கேட்கிறோமே தவிர வீம்புக்கு அல்ல என்பதை உணர்த்த வேண்டும். எவ்வளவு அவசரமான கட்டத்தில் கொடுத்து உதவினோம் என்பதைச் சொல்லி மனத்தை இளகச் செய்ய வேண்டும்.

மூன்றாவது மனிதரை அதில் தலையிடச் செய்யக்கூடாது. இந்த ஆளிடமிருந்து தப்பிக்கவே முடியாது என்கிற எண்ணத்தைப் பக்குவமான வழிகள் அத்தனையும் பயன்படுத்தி அவர்களுக்கு உணர்த்த வேண்டும். மன உறுதியை இனிமையான வழிகளில் காட்ட வேண்டும்.

இவ்வழிகளைப் பின்பற்றினால் வராத தொகைகள் கூட வசூலாகி விடும்.

பாருங்களேன்– கூடிய விரைவில் எனக்குத் தாங்ஸ் சொல்லத்தான் போகுறீர்கள்!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமா அதிபர் திணைக்களச் செயற்பாட்டில் எந்தவிதக் குறைகளையும் நான் காணவில்லை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

சட்டமா அதிபர் திணைக்களம், எவராலும் விமர்சிக்கப்படுவதை விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அத்திணைக்களத்தை விமர்சிப்பவர்கள், அவர்களைத் தனியே விட்டு, சுதந்திரமாகவும் அழுத்தங்களின்றியும் அவர்கள் பணியாற்ற வழிசெய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தினார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். "சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகளில், எந்தவிதக் குறைபாடுகளையும் நான் காணவில்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஊழல்மிக்க அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் எதிராக, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதில் தாமதம் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், எனினும், 2015 ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டிருக்காவிட்டால் என்ன நடந்திருக்கும் என்பதைப் பற்றி யாரும் கதைப்பதில்லை என்றும் தெரிவித்தார்.

இலங்கையால் ஜெனீவாவில் உப அனுசரணை வழங்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் உள்ளடக்கங்களை அமுல்படுத்துவதற்காக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால், இவ்வாண்டு மார்ச் மாதம் முதல், இலங்கைக்கு 2 ஆண்டுகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் மீறப்பட்டுள்ளதாகக் கூறப்படும் விடயங்கள் தொடர்பான உள்ளக விசாரணையில், சர்வதேச நீதிபதிகளோ? அல்லது சர்வதேச சட்டத்தரணிகளோ? இடம்பெறமாட்டார்கள் என்ற தனது கருத்தை மீள வலியுறுத்திய ஜனாதிபதி, உள்ளக விசாரணை தொடர்பாகக் கதைப்பதற்கான காலம் இன்னமும் வரவில்லை என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைத்துள்ள அரசாங்கத்தின் உருவாக்கம் தொடர்பாகவும், சில தரப்புகளால் தற்போது விமர்சனங்கள் முன்வைக்கப்படுவது தொடர்பாகவும் அவரிடம் வினவப்பட்ட போது, "இரண்டு கட்சிகளும் இணைந்து, தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு 2015 ஆம் ஆண்டில் முடிவெடுத்த போது, அனைவரும் அதை ஆதரித்தனர். அவ்வாறாயின், தற்போது ஏன் விமர்சிக்கிறார்கள்? இரண்டு கட்சிகளும் இணைந்து, இந்த முடிவுக்கு வராவிட்டால், என்ன நடந்திருக்கும்?" என்று அவர் கேள்வியெழுப்பினார்.

தொழில்நுட்பத்துக்கும் மருத்துவத்துக்குமான தெற்காசிய நிறுவகம் (சைட்டம்) தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை தொடர்பாகக் கேட்கப்பட்ட போது, அது, தேவைக்கு அதிகமாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது எனவும் விரைவான தீர்வொன்றைக் காணக்கூடிய நிலையை அது தாண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இது தொடர்பான தீர்வொன்றைக் காண்பதற்காக, அனைத்துப் பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள், மருத்துவ பீடங்களின் பீடத் தலைவர்கள், அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், அதிகாரிகள் ஆகியோருடனான கலந்துரையாடலொன்று, உயர்கல்வி அமைச்சில், ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

போர்க் குற்றச்சாட்டு

தேர்தலொன்றுக்குச் செல்ல வேண்டுமென, அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு, எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தார் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதைக் கேட்காமல், தேர்தலுக்கு அவர் சென்றார் எனக் குறிப்பிட்டார். பூகோளச் சமூகத்தின் எதிர்ப்புக்கு முகங்கொடுக்க முடியாமலேயே, தேர்தலுக்கு அவர் சென்றார் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

"2015ஆம் ஆண்டில் அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்டிருக்காவிட்டால், இலங்கைக்கு எதிராக ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும், வர்த்தகத் தடைகளை விதித்திருக்கும். அரச, இராணுவத் தலைவர்கள், போர்க்குற்றங்களுக்காக, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டிருப்பர்.

"இலங்கை மீது காணப்பட்ட எதிர்மறையான நிலையை, நல்லாட்சி அரசாங்கம் மாற்றியது. எந்தவொரு நாடோ அல்லது சர்வதேச முகவரமைப்போ, இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பாகவோ மின்சாரக் கதிரை தொடர்பாகவோ, தற்போது எதுவும் கதைப்பதில்லை" என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

# அஸ்வர் வைத்தியசாலையில் அனுமதி; நேரில் சென்று நலம் விசாரித்த மகிந்த



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் முக்கியஸ்தருமான ஏ.எச்.எம். அஸ்வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த சில தினங்களாக சுகயீனமுற்றிருந்த அவர் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த நிலையில் அவரைச் சந்திப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று வைத்தியசாலைக்கு விஜயம் செய்தார். (இ-7)

# கொழும்பு தமிழ்ச்சங்கம் நடத்தும் தனிநாயகம் அடிகளார் புலமைப்பரவல்

கொழும்பு தமிழ்ச் சங்கம் செப்டெம்பர் முதலாம், இரண்டாம் திகதிகளில் பேரறிஞர் வணபிதா தனிநாயகம் அடிகளாரது புலமைப்பரவல் நிகழ்ச்சியினை நடத்தவுள்ளது. கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற வுள்ள இந் நிகழ்ச்சியில் சிறப்புரைகள், ஆய்வரங்கு மற்றும் நாட்டிய நிகழ்ச்சி என்பன நடைபெறுவதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது.

செப்டெம்பர் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை ஆறு மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவர் தம்பு சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ள முதலாம் நாள் நிகழ்ச்சியில் மாங்குளம் அமைதிக் கரங்கள் நிறுவனத்தின் தலைவர் அருட்தந்தை செபமாலை அன்புராசா "வணபிதா தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப்பணி" என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.

இரண்டாம் நாள் 02.09.2017 சனிக்கிழமை காலை சென்னைப் பல்கலைக்கழக தமிழிலக்கியத்துறை மேனாள் தலைவர் பேராசிரியர் வீ.அரசு தலைமையில் "தமிழிலக்கியமும் பண்பாடும்" என்னும் தொனிப் பொருளில் ஆய்வு அளிக்கை நிகழ்வு நடைபெறும். தொடக்கவுரையை கொழும்பு தமிழ்ச்சங்க நுண்கலைக் குழுச் செயலாளர் தெ.மதுசூதனன் வழங்க தலைமையுரையை பேராசிரியர் வீ.அரசு நிகழ்த்துவார்.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன், கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர் பேராசிரியர் கொ. றொ.கொண்ஸ்ரன்ரைன், தென்கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் முனைவர் க.இரகுபரன், கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் முனைவர் நதிரா மரியசந்தனம், யாழ்.இணுவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் வே.சேந்தன், யாழ்.பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் ஆகியோர் ஆய்வளிக்கை செய்வர்.

இரண்டாம் நாள் மாலை நிகழ்வுகளில் தொடக்கவுரையை கொழும்பு தமிழ்ச் சங்க கல்விக்குழுச் செயலாளர் மா.கணபதிப்பிள்ளை நிகழ்த்த, சென்னைப் பல்கலைக்கழக தமிழிலக்கியத்துறை மேனாள் தலைவர் பேராசிரியர் வீ.அரசு சிறப்புரையாற்றுவார். இதனைத் தொடர்ந்து விமலோதய கலாசார பரத நாட்டிய கேந்திரத்தின் தலைவி நாட்டிய கலாசிகாமணி கலாநிதி சுபாஷிணி ஸ்ரீபத்மநாதனின் பரத நாட்டிய நிகழ்ச்சி இடம்பெறும். (இ-3)



சர்வதேச தென்னை தினத்தை முன்னிட்டு தென்னை பயிர்ச்செய்கை சபையின் யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயத்திற்கு உட்பட்ட கண்டாவளை பிரிவில் கல்மடு நகரில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மானியத்திட்டம்,கடன்திட்டம், விரிவாக்கல் நிகழ்ச்சி திட்டங்கள் தொடர்பான பயிற்சிகளும் தென்னங்கன்றுகளும் அண்மையில் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையில்லாப் பிரேரணை ஊடாக மக்களை தெளிவூட்ட மகிந்த எதிர்பார்ப்பு

(கொழும்பு)

**அமைச்சர் ராஜித சேனாரட்னவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தாக்கல் செய்யப்பட்டதன் ஊடாக நாட்டு மக்களைத் தெளிவுபடுத்தும் எதிர்பார்ப்பு இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**




நாரஹேன்பிட்டிய அபயராம விகாரையில் நேற்று இடம்பெற்ற மத நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ராஜித சேனாரட்ன இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு சென்றாரா? இல்லையா? என்பது முக்கியமல்ல. அவர் இலஞ்சம் பெற்றுக் கொண்டாரா? என்பதே முக்கியம் என்று மகிந்த கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் வரும் காலத்தில் இது தொடர்பில் பார்க்கலாம் என்றும், அதன் போது மக்கள் தீர்மானம் எடுப்பார்கள் என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)

# அமைச்சர் ராஜிதவுக்கு எதிரான பிரேரணை விரைவில் நிறைவேறும்

## கூட்டு எதிரணி நம்பிக்கை

(கொழும்பு)

அமைச்சர் ராஜித சேனாரட்னவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் விரைவில் பாராளுமன்றில் விவாதம் நடத்தி அதனை நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்று கூட்டு எதிரணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சி நேற்று முன்தினம் பகல் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் ராஜித சேனாரட்னவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் விரைவில் பாராளுமன்றில் விவாதம் நடத்தி அதனை நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

அமைச்சர் ராஜித சேனாரட்னவின் அமைச்சின் வினைத்திறனற்ற செயற்பாடுகள், அவர் பாராளுமன்றிலும் வெளியிலும் நடந்துகொள்ளும் விதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுகிறது.

தேர்தல் தொடர்பில் தமக்குத் தேவையான சில சட்ட மூலங்களை பாராளுமன்றில் நிறைவேற்றித்தந்தால் தேர்தலை நடத்த முடியும் என சுயாதீன தேர்தல் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்திருந்தது.

எனவே குறித்த சட்ட மூலங்களை நிறைவேற்றுவது தொடர்பில் பாராளுமன்றில் திகதி தீர்மானிக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை கடற்படைத் தளபதி சின்னையாவிற்கு நெருக்கடி

## 500 மில்லியன் நட்ட ஈடு கோரி கடிதம்



இலங்கை கடற்படை தளபதி ட்ரவிஸ் சின்னையாவிடம் 500 மில்லியன் ரூபா நட்ட ஈடு கோரி முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட தனது சட்டத்தரணி ஊடாக கடிதம் அனுப்பியுள்ளார்.

குற்ற விசாரணை பிரிவில் கடற்படை தளபதி ட்ரவிஸ் சின்னையா வழங்கியுள்ள வாக்குமூலம் ஒன்று தொடர்பிலேயே இவ்வாறு நட்டஈடு கோரி முன்னாள் கடற்படை தளபதி கடிதம் அனுப்பியுள்ளார்.

தனக்கும் தனது குடும்பத்தினருக்கு எதிராகவும் அவதூறு பரப்பும் வகையில் பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளதாக கடற்படை தளபதி ட்ரவிஸ் சின்னையாவுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

திருகோணமலை சித்திரவதை முகாமில் சந்தேகநபர்கள் கொலை செய்யப்பட்டதாகவும், இது குறித்து அப்போதைய கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட அறிந்திருந்ததாகவும் தற்போதைய கடற்படை தளபதி ட்ரவிஸ் சின்னையா சுமத்தியுள்ள குற்றச்சாட்டு பொய்யானது என அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 13ஆம் திகதி குறிப்பிடப்பட்டு குறித்த நிபந்தனைக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தியமைக்காக 500 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்க வேண்டும்என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு வழங்கத் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சட்டமா அதிபர் அங்கீகரித்தாரா?

## தினேஷ் எம்.பி.கேள்வி



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் (திருத்த) சட்ட மூலத்தில் கொண்டுவரப்பட்ட 50 திருத்தங்களும், சட்டமா அதிபரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவா எனக் கேள்வியெழுப்பிய, ஒன்றிணைந்த எதிரணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன, இந்தத் திருத்தங்களின் காரணமாக, நிலையற்ற முடிவு பெறப்படுமெனவும் தெரிவித்தார்.

இந்தத் திருத்தம் தொடர்பான விவாதம், நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு முன்பாக, செயற்குழு மட்டத்தில், குறித்த 50 திருத்தங்களும் கலந்துரையாடப்பட வேண்டுமெனவும், திருத்தங்கள், நேற்று முன்தினம்காலையே, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைத்ததாகவும், அவை முன்னரேயே வழங்கப்பட்டிருக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

"இது, வரலாற்றுரீதியான நிகழ்வு. இவ்வாறான விடயம், முன்னர் நடைபெற்றது கிடையாது. திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின், முன்னரே அவர்கள் சமர்ப்பித்திருக்க வேண்டும்" என்று அவர் தெரிவித்தார்.

முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, இந்தச் சட்டமூலம் [illegible] தெரிவித்திருந்தார்.

அரசாங்கத்துடன் அக்கட்சி, ஏற்கனவே கலந்துரையாடியிருக்கலாம் என்ற அடிப்படையில், அவர்கள் இதை அறிந்திருக்கலாம் என்று அவர் குறிப்பிட்டார். "ஜே.வி.பி. தலைவருடன் நான் ஒத்துப் போகவில்லை. திருத்தங்கள் குறித்து, அரசாங்கத்துடன் அவர்கள் கலந்துரையாடினர். அதனால் அவர்கள் அறிவர். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இன்று காலையிலேயே அவற்றைப் பெற்றுக் கொண்டனர்" என்றும் தினேஷ் தெரிவித்தார். (இ-7)

# ரஞ்சனுக்கு எதிராக சட்டத்தரணிகள் சட்ட நடவடிக்கை



(கொழும்பு)

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக, மானநஷ்டக் குற்றச்சாட்டைச் சுமத்துவதற்கு, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முடிவெடுத்துள்ளது என, சங்கத்தின் தலைவர் யு.ஆர். டி சில்வா தெரிவித்தார். சங்கத்தின் நிறைவேற்றுச் செயற்குழுக் கூட்டம், கடந்த புதன்கிழமை நடைபெற்ற போது, இந்த முடிவு, ஏகோபித்த ரீதியில் எடுக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

சட்டத்தரணிகளும் நீதிபதிகளும் ஊழல்வாதிகளாக உள்ளனர் எனவும் நாட்டை அவர்கள் அழித்துக் கொண்டிருக்கின்றனர் எனவும், பிரதியமைச்சர் ரஞ்சன் தெரிவித்தாக யு.ஆர். டி சில்வா குறிப்பிட்டார்.

அவ்வாறான சட்டத்தரணிகளினதும் நீதிபதிகளின் பெயர்களை, 41 நாட்களுக்குள், பிரதியமைச்சர் வெளியிட வேண்டுமெனத் தெரிவித்த யு.ஆர். டி சில்வா, அவ்வாறு செய்வதற்கு அவர் மறுப்பாராயின், அரசமைப்பின் 105ஆவது உறுப்புரையின் அடிப்படையில், சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதியைச் செலவிடாத நல்லிணக்க அமைச்சு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பொறுப்பில் உள்ள தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு இந்த ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில், அரையாண்டு காலத்தில் 3.3 வீதத்தை மட்டுமே செலவிட்டுள்ளதாக அரசாங்கத்தின் அதிகாரபூர்வ புள்ளி விபரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

2017 ஆம் ஆண்டில், அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ஜனவரி முதல் ஜூன் வரையான ஆறு மாத காலத்தில் அமைச்சுக்கள் செலவீடு செய்துள்ள நிதி பற்றிய தகவல்கள் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இதற்கமைய, அரசாங்கத்தில் உள்ள இரண்டு அமைச்சுக்கள் மாத்திரமே, ஒதுக்கப்பட்ட நிதியில் 50 வீதத்துக்கு மேல் செலவிட்டுள்ளன.

சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு, இந்த ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 70.4 வீதத்தை முதல் ஆறு மாதங்களில் செலவிட்டுள்ளது.

அடுத்ததாக அஞ்சல் மற்றும் அஞ்சல் சேவைகள் அமைச்சு, ஒதுக்கப்பட்ட நிதியில் 50.5 வீதத்தை செலவழித்துள்ளது.

பல்வேறு அமைச்சுக்களுக்கும் இந்த ஆண்டில் 3, 628, 110.4 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. அதில், 1.792, 165.1 மில்லியன் ரூபா மாத்திரம், முதல் அரையாண்டு காலத்தில் செலவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பொறுப்பில் உள்ள தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு இந்த ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில், 3.3 வீதத்தை மட்டுமே செலவிட்டுள்ளது. டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சு 3.9 வீதமான நிதியை செலவிட்டுள்ளது.

சுற்றுலா அமைச்சு 6.8 வீதமும், பொதுத்துறை நிறுவனங்கள் அபிவிருத்தி அமைச்சு 5.9 வீதமும், தமக்கான ஒதுக்கீடுகளை செலவிட்டுள்ளன என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (இ-7)

# வர்த்தக நிலையத்தில் திருடிய மூன்று பெண்கள் கைதாகினர்

ஹபரதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகஹாகொட பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பெறுமதியான பால்மா உள்ளிட்ட உணவுப் பொருட்களைத் திருடிய மூன்று பெண்களை வர்த்தக நிலைய ஊழியர்கள் பிடித்துள்ளனர்.

திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட மூவரில் இருவர் சகோதரிகள் எனவும் இவர்கள் பாணந்துறைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

இதற்கு முன்னரும் இவர்கள் இவ்வாறு பெறுமதி வாய்ந்த பொருட்களை குறித்த வர்த்தக நிலையத்தில் திருடியுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது. குறித்த மூவரையும் வர்த்தக நிலைய ஊழியர்கள் பொலிஸ் நிலையத்தில் நேற்று பிற்பகல் ஒப்படைத்துள்ளனர். (இ-7)

# சீமெந்து வழங்கல்



வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவக்கொழுந்து அகிலதாஸ் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வடமராட்சியில் வசிக்கும் வறுமைக்கோட்டின் கீழுள்ள ஆறு குடும்பங்களுக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் வினோராஜ் முன்னிலையில் சீமெந்து பைக்கற்றுக்களை அண்மையில் வழங்கி வைத்தார். (இ-60)

# O/L முன்பு தேர்தலை நடத்துக

## ஜே.வி.பி. அரசிடம் கோரிக்கை

இவ்வாண்டு டிசெம்பரில் இடம்பெறவுள்ள, கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தர (O/L) பரீட்சைக்கு முன்பாக, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு, மக்கள் விடுதலை முன்னணி, அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமாகிய அநுரகுமார திஸாநாயக்க, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் (திருத்தம்) சட்டமூலம் தொடர்பான விவாதத்தில், நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே, இவ்வாறு கோரிக்கையை முன்வைத்தார்.

சட்டமூலத்துக்கான திருத்தங்கள், செப்டெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே, இவ்வாண்டில் இத்தேர்தல்களை நடத்த முடியுமென, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே, இத்திருத்தங்கள், இவ்வாரத்துக்குள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

தேர்தல்களை ஒத்தி வைப்பதற்கு, அரசாங்கத்தாலும் ஒன்றிணைந்த எதிரணியாலும், நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று குற்றஞ்சாட்டிய அவர், "திருத்தங்களைப் படிப்பதற்கு, மேலதிக நேரத்தை, ஒன்றிணைந்த எதிரணி கோருகிறது. தேர்தலை ஒத்திவைக்க வேண்டுமென்பதற்காகவே அது இவ்வாறு கோருகிறது. தேர்தல்களை நடத்த வேண்டுமெனக் காட்டும் அரசாங்கமும், அதற்குச் சம்மதிக்கிறது" என்று அவர் தெரிவித்தார்.

இதன்போது, குறித்த சட்டமூலத்தில் சில திருத்தங்களை, அநுரகுமாரவும் முன்வைத்தார். குறிப்பாக, வைப்புத் தொகையை, ஆயிரத்து 500 ரூபாயாக மாற்றுவதற்கான திருத்தத்தை, அவர் முன்வைத்தார். தற்போதைய நிலையில், அரசியல் கட்சியொன்று, வைப்புத் தொகையில் மாத்திரம், சுமார் 25 மில்லியன் ரூபாயைச் செலவிட வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டுமாயின், தேர்தலில் பெண்கள் தெரிவாகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்த அவர், உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒன்று அல்லது இரண்டு உறுப்பினர்களைப் பெறுவதற்கு வாய்ப்புள்ள கட்சிகள், பெண் உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய நிர்ப்பந்திக்கப்படக் கூடாது எனக் குறிப்பிட்டார். மாறாக, சிறிய கட்சியொன்று, மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆசனங்களைப் பெற்றாலேயே, பெண் உறுப்பினரை நியமிக்க நிர்ப்பந்திக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த அவையின் தலைவர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் முன்வைத்த திருத்தங்களை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1172

Search for people, places and things Nagendram Home


**குவேனி**




**சந்துரு**




**மீனா**




**சர்மி**




**வாகீசன்**




**முகுந்தன்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்த பேரறிவாளன்

தற்போது அனைவரும் பேரறிவாளன் பரோல் பற்றி பேசுகின்றார்கள். 26 வருடங்கள் சிறையில் இருந்து ஒரு மாதம் பரோலில் தாய், தந்தையை காண வெளியில் வந்திருக்கிறார் பேரறிவாளன்.

யார் இவர்? எப்படி சிறை சென்றார்? என்ன நடந்தது?

1991ஆம் ஆண்டு ஜுன் மாதம் பத்தாம் திகதி மாலை வேளையில் "விசாரித்து விட்டு காலை அனுப்பி விடுகின்றோம்" என்று கூறி பேரறிவாளனை கூட்டிச் சென்றனர். அந்த இரவு இன்னும் வரை விடியவே இல்லை...

தனிமைச் சிறையில் அடைக்கப்பட்ட பேரறிவாளன் 26 வருடங்களாக அந்த ஒரு விடியலுக்காக காத்திருந்தான்.

வேலூர் மாவட்டம் - சோலையார் பேட்டையில் ஞானசேகரன், அற்புதம் அம்மாள் என்போருக்கு 1971ஆம் ஆண்டு இரண்டாவது குழந்தையாக பிறந்தவரே அ.ஞா. பேரறிவாளன்.

அமைதியான சுபாவம் கொண்டவர், ஆசிரியர் நண்பர்களின் பிரியன். அன்பானவன், அறிவானவன், நல்லதொரு இசையமைப்பாளர்.

ராஜீவ் கொலை வழக்கை விசாரிக்க தனியாக அமைக்கப்பட்ட அலுவலகமே மல்லிகை புலனாய்வுத்துறை அலுவலகம். இங்குதான் பேரறிவாளனை 10.06.1991 அன்று அழைத்துச் சென்று நளினி யார்? முருகன் யார்? இவர்கள் எங்கே என்று விசாரணைகள் ஆரம்பமாகின.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது அதீத ஈடுபாடு கொண்ட பேரறிவாளன், நளினியைப் பற்றியும், முருகனைப் பற்றியும் எவ்வாறு அறிவார்?

ஜுன் 10 விசாரணைகளுக்காக அழைக்கப்பட்ட பேரறிவாளன் கைது செய்யப்பட்டார் என்ற செய்தி ஜுன் 18ஆம் திகதி வெளிவந்தது.

"தடா சட்டம்" பற்றி அறியாத இவர் தான் அனுபவிக்கும் சித்திரவதைகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு அதிகாரிகள் காட்டிய பத்திரங்களில் கையொப்பமிடும் நிலைக்கு தள்ளப்பட்டார். அன்று அவர் போட்ட கையெழுத்து தான் இன்று அவரது உயிரை விலை பேசியுள்ளது.

1999ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதி தடா சட்டத்தின் மூலம் தண்டித்தது குற்றம் என்ற உச்ச நீதிமன்றம், 19 பேரை விடுதலை செய்தும், மூவருக்கு ஆயுள் தண்டனையும் நால்வருக்கு மரண தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தது. அந்த நால்வரில் ஒருவர் தான் பேரறிவாளன். நம்பிக்கை இழந்த நிலையில் சிறையில் அடைபட்டுக் கிடந்தார். பேரறிவாளன் படித்த படிப்புகளும், பெற்ற சான்றிதழ்களும் ஏராளம், 12ஆம் வகுப்புத் தேர்வில் இவர் பெற்ற மதிப்பெண் 1096.


பேரறிவாளனின் விடுதலைக்காக முதல் குரல் கொடுத்தார்கள் மூன்று பெண் சட்டத்தரணிகள். இதைத் தொடர்ந்து எங்கும் கோஷங்கள் முழங்கின.

உலகிலேயே மரணதண்டனையை எதிர்த்து உயிர்விட்ட முதல் பெண் "செங்கொடி" இவர் தீக்குளித்து பேரறிவாளன், சாந்தன், முருகனை விடுவியுங்கள் என்ற அதிர்வலைகளை உருவாக்கினார்.

இந்த அதிர்வலைகள் லண்டன், அமெரிக்கா, போன்ற நாடுகளிலும் ஒலித்தது. தமிழக சட்டசபையில் மூவரின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைப்பதற்கு ஏகமனதாக சட்டம் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து உச்ச நீதிமன்றம் இவர்களுடைய மரணதண்டனையை 8 வாரங்களுக்கு இடைக் காலத் தடை விதித்தது.

ராஜீவ் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் போது சி.பி.ஐ. அதிகாரியாக தியாகராஜன் பதவி வகித்தார். இவர் இந்த சம்பவம் பற்றிக் கூறும் போது "பற்றரி எதற்காக வாங்கச் சொன்னார்கள் என்பது எனக்குத் தெரியாது. வாங்கித் தருமாறு கேட்டார்கள், வாங்கிக் கொடுத்தேன். மற்றபடி எனக்கு எதுவும் தெரியாது என்பதை பேரறிவாளன் பல தடவைகள் கூறினார். ஆனால் இதை நான் அவருடைய வாக்குமூலத்தில் எழுத மறந்து விட்டேன்" என்று கூறுகின்றார்.


பேரறிவு


தாய் அற்புதம்

ராஜீவ் கொலை சம்பவத்தில், 1991 ஆம் ஆண்டு மே மாதம் முதல் வாரத்தில் பற்றரி (மின்கலம்) வாங்கிக் கொடுத்தார் என்பதுதான் இவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு.

ஆனால் சிவராசனுக்கும் பொட்டு அம்மானுக்கும் இடையில் நடந்த தொலைபேசி கலந்துரையாடலில் "இந்தக் கொலைத் திட்டம் தானு மற்றும் சுபாவைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது" என்ற உரை பதிவாகியுள்ளது. இதனால் முருகன், சாந்தன், பேரறிவாளன் இந்த கொலை சம்பவம் பற்றி எதுவும் அறிந்திருக்கவில்லை என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஒரு குற்றமற்ற உயிர் தண்டிக்கப்படக் கூடாது, ராஜீவ் காந்தியின் பெயரால் எந்த உயிரையும் எடுத்து விடாதீர்கள், இந்தியாவில் மனிதநேயம் இருப்பதை நிரூபித்துக் காட்டுங்கள், தண்டிக்கப்பட்ட தன் பின் உண்மை வெளிவந்து பயனில்லை. 26 வருடங்கள் போதும் இதற்கு மேலும் தண்டிக்காதீர்கள் என அரசியல்வாதிகளும், சமூக ஆர்வலர்களும், நீதியரசர்களும் வேண்டிக் கொள்கின்றனர்.

இந்த நிலையில் தற்போது பேரறிவாளனின் தாய் அற்புதம்மாளின் முயற்சியாலும், பலருடைய ஆதரவினாலும் பேரறிவாளனுக்கு 1 மாதம் வெளியில் வருவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட் டுள்ளது.

சிறு வயதில் சிறை சென்ற இவருடைய இளமையை சிறையில் தொலைத்து விட்டார். எஞ்சியிருக்கும் வயதில் தாய், தந்தையுடன் கழிக்க வேண்டும் என்ற கனவோடும், ஆசையோடும் நிரந்தரமாக வெளியில் வர காத்திருந்தார்.

26 வருடங்களாக சிறையில் இருக்கும் பேரறிவாளனுக்கு அடிக்கடி சுகயீனம் ஏற்படும் என தெரிவித்து, பரோல் கோரி அற்புதம்மாள் மனு தாக்கல் செய்திருந்தார். இதன்படி பேரறிவாளனுக்கு பரோல் கிடைத்துள்ளது.

(நன்றி:- இணையம்)

# வசீம் தாஜுடீன் கொலை வழக்கில் ஆனந்த சமரசேகர கைதாக வாய்ப்பு

றக்பி வீரர் வசீம் தாஜுடீனின் உடற் பாகங்கள் காணாமற்போன சம்பவத்துடன் தொடர்புடையவரென சந்தேகிக்கப்படும் கொழும்பு முன்னாள் பிரதம வைத்திய அதிகாரி பேராசிரியர் ஆனந்த சமரசேகரவை கைது செய்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக சட்டமா அதிபர் நேற்று முன்தினம் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

வசீம் தாஜுடீனின் கொலை வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலான் ரத்நாயக்க நீதவானின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.



கொழும்பு மேலதிக நீதவான் ஜெய்ராம் ட்ரொட்ஸ்கி முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பிரதான சந்தேக நபர்களான மேல்மாகாணத்தின் முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்க மற்றும் நாரஹேன்பிட்டியவின் குற்றத் தடுப்பு பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க பெரேரா ஆகிய இருவரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர்.

குறித்த இருவரும் றக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீனின் கொலை வழக்குடன் தொடர்புடைய முக்கியமான சாட்சியங்களை மறைத்தமை மற்றும் கொலைக்கான திட்டம் தீட்டிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வசீம் தாஜுடீனின் மரணம் விபத்து அல்ல என்றும் அது ஒரு கொலையெனவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் 2015 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27 ஆம் திகதி நீதிமன்றத்துக்கு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதுசெய்வதன் மூலம் மீனவர் பிரச்சினையை தீர்க்க முடியாது

## கடற்படைத் தளபதி சின்னையா தெரிவிப்பு

கைதுகளின் மூலமாக இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியாது. கைதுகளை விடுத்து இந்த மீனவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என புதிய கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா தெரிவித்தார். நவம்பர் முதல் நவீன கண்காணிப்பு கருவிகள் பயன்படுத்தப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை கடற்படை தலைமையகத்தில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி செயற்பாடுகளை தடுக்க எவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினை என்பது இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்ட பிரச்சினை அல்ல. இது மிக நீண்டகால பிரச்சினையாகும்.


சுமார் 100 ஆண்டுகளாக இந்த கடல் பிரச்சினை உள்ளது. இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களின் எல்லை மீறிய மீன்பிடி நகர்வுகள் என்பது விரைவில் தீர்வு பெறக்கூடிய ஒன்றல்ல. இப்போது புதிய மீன்பிடி சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால் இவற்றின் மூலமாக தீர்வு ஒன்றை விரைவில் பெற்றுக்கொள்ள முடியும் என நாம் நம்பவில்லை. இதுவரையில் கடற்படை மூலமாக கைதுகள் இடம்பெற்றன, எல்லை தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும்எண்ணைப்பொறுத்தவரையில் கைதுகளை நிறுத்த வேண்டும். மாறாக இந்திய மீனவர்களுக்கு உதவியாக நாம் இருக்க வேண்டும். ஒப்பந்தம் ஒன்றின் மூலமாக இதனை நாம் முன்னெடுக்க வேண்டும். இந்திய மீனவர்களுக்கான கடல் எல்லையை அடையாளம் காட்ட வேண்டியது எமது கடமையாகும்.

கடல் எல்லை அறியாத காரணத்தினால்தான் அவர்களின் அத்துமீறல் இடம்பெற்று வருகின்றது. எனவே இலங்கை மற்றும் இந்திய கடற்படையின் உதவியுடன் அவர்களுக்கான கடல் எல்லையை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இலங்கை மீனவர்களுக்கும் இதனையே நாம் செயற்படுத்த வேண்டும். மாறாக கைது செய்வதால் எந்த தீர்வும் கிடைக்கப்போவதில்லை.

நவம்பர் மாதம் தொடக்கம் புதிய கண்காணிப்பு செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளோம். கடற்படை படகுகளில் இந்த நவீன தொழில்நுட்ப திட்டங்களை கையாளவுள்ளோம். இந்நிலையில் இந்த முரண்பாடுகளை எம்மால் சரியாக கையாள முடியும் என நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



கேலிச்சித்திரம்

# போதைப்பொருள் பாவனை; கிழக்கில் 2,483 பேர் கைது

## சிறுவர்களே பிரதான இலக்கு

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் கிழக்கு மாகாணத்தில், கடந்த ஆண்டு 2,483 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனரென, அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஆய்வு மற்றும் விசாரணைப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் பத்ராணி சேனநாயக்க தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில், போதைப்பொருள் பாவனையால் ஏற்பட்டுள்ள அபாயங்களின் ஒரு பகுதியாக, கிழக்கு மாகாணத்திலும் போதைப்பொருள் குற்றங்கள் பற்றி அவர் விபரம் வெளியிட்டார்.

இதன் பிரகாரம், கிழக்கு மாகாணத்தை நோக்குமிடத்து போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் கடந்த ஆண்டு அம்பாறை மாவட்டத்திலேயே, ஆகக் கூடுதலானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டத்தில் 1,110 பேரும், அடுத்தபடியாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 696 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 677 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் பொதுவாக சிறுவர்களே, போதைப் பொருளின் இலக்காகக் கொள்ளப்படுவதாகவும், போதைப் பொருளுக்கு இலக்காக்கப்படும் சிறுவர்களின் இந்த அபாய வயதெல்லை, கடந்த காலங்களில் 15 என்ற மட்டத்திலிருந்து தற்போது 11 வயது என்ற மட்டத்துக்கு இலக்கு வைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் அபாயம் குறித்து பெற்றோர், பாதுகாவலர், ஆசிரியர்கள், அதிபர்கள் உட்பட சமூக நல அமைப்புகள், ஆர்வலர்களும் அதீத அக்கறை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (இ-7)

# பெண்ணின் தொலைபேசிக்கு ஆபாசப்படம் அனுப்பியவர் கைது

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி-05 பகுதியில் பெண் ஒருவரின் கையடக்க தொலைபேசிக்கு ஆபாச படங்களை அனுப்பிய இளைஞன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண்ணின் கணவர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்தே கணவரின் நண்பனான இளைஞனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ-7)

# இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு கடத்தவிருந்த 140 கிலோ கஞ்சா பறிமுதல்





தனுஸ்கோடியை அடுத்துள்ள கம்பிப்பாடு கடற்கரையில் இருந்து இலங்கைக்கு கடத்தப்படயிருந்த சுமார் 140 கிலோ கஞ்சாவை தனுஸ்கோடி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கம்பிப்பாடு கடற்கரையில் மணலில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 140கிலோ கஞ்சாவை நேற்று நண்பகல் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

தனுஸ்கோடி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டதுடன், கடத்தலையும் முறியடித்துள்ளனர்.

இதன்போது கஞ்சாவை கடத்த முயற்சி செய்தவர் யார்? என்ற கோணத்தில் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

மேலும் இதன் சர்வதேச மதிப்பு சுமார் 1.40 கோடி என பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# பொலநறுவையில் வர்த்தக மையம்



ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் பொலநறுவையில் நிர்மாணிக்கப்படவுள்ள வர்த்தக மையத்தின் இடத்தை பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி நேற்று முன்தினம் மாலை சென்று பார்வையிட்டார்.

பொலநறுவை மாவட்டத்தின் கதுருவெல பிரதேசத்தில் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 324 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியில் வர்த்தக மையம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான, அடிக்கல் நாட்டி வைக்கும் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இடம்பெற உள்ளதென கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி வழிபாடு



மியன்மாரிலிருந்துகொண்டுவரப்பட்டுள்ள புத்தபெருமானின் திருவுருவச் சிலைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முதன்முறையாக மலர் தூவி வழிபட்டார். இந்நிகழ்வு நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.


மியன்மாரில் வசிக்கும் ஜயந்த ராஜகருணா என்பவரால் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ள இந்த புத்தபெருமானின் திருவுருவ சிலை அநுராதபுரம் ஸ்ரீ சம்புத்த ஜயந்தி விகாரைக்கு கொண்டு செல்லப்படவுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## எல்லா உயிர்களுக்கும் உதவி செய்



ஒரு நாட்டு ராஜாவிடம் முத்தன் வேலை செய்து வந்தான். அந்த ராஜாவுக்கு மிருகங்கள் பறவைகள் பேசும் பாஷை தெரியும். முத்தனுக்கு ஒரே ஆச்சரியம், எப்படி ராஜா விலங்குகள் பேசுவதை அறிந்து கொள்கிறார் என்பது அவனுக்கு வியப்பாக இருந்தது. முத்தன் தான் அந்த ராஜாவுக்கு தினமும் உணவு கொண்டு வந்து கொடுப்பான்.

ராஜாவின் உணவில்· ஒரு பகுதி மட்டும் தனியாக தனிப் பெட்டியில் ராணியே சமைத்துத் தருவாள்.

ஒரு நாள் முத்தன் அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தான். அந்த பெட்டிக்குள் ஏதோ துண்டு துண்டுகளாக சமைத்து வைக்கப்பட்டிருந்தன. இது என்னவாக இருக்கும் என்று ஒரு துண்டை எடுத்து சாப்பிட்டுப் பார்க்கிறான்.

அதைச் சாப்பிட்டதும் முத்தனுக்கு பறவை மிருகங்களின் பேசும் பாஷை புரிய ஆரம்பிக்கிறது. புதிய சக்தி கிடைத்ததும் அவன் அரண்மனையில் இருந்து அப்படியே புறப்பட்டு கிளம்பி விடுகிறான்.

அவன் குதிரையில் கிளம்பிச் செல்லும் வழியில் எறும்புகள் சாரை சாரையாக போவதை பார்த்தான்; எறும்பின் தலைவன் இவனிடம் குதிரையை எறும்புகளை மிதிக்காத வண்ணம் செலுத்தும் படி வேண்டிக் கொண்டது. அவனும் அப்படியே செய்தான். எறும்புகள் நன்றி தெரிவித்து, என்றேனும் உங்களுக்கு உதவுவேன் என்று கூறியது. அடுத்து, அவன் செல்லும் வழியில் குளம் இருந்தது அங்கு மூன்று மீன்கள் அழும் குரல் கேட்டது. அவை புதருக்குள் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தன.

குளத்தில் தாவிக் குதிக்கும் போது அவை தவறிப் புதரில் விழுந்திருந்தன. அத்தனையும் காப்பாற்றி தண்ணீருக்குள் மீண்டும் எடுத்துவிட்டு கிளம்பினான்.

மீன்களும் நன்றி தெரிவித்தது. அவன் கொஞ்ச தூரம் ஒரு காட்டைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தான். சின்னஞ்சிறு காகங்களின் குரல் கேட்டது. தாய் காக்கை அவைகளிடம் "நீங்களே உங்கள் உணவைத் தேடிக் கொள்ளுங்கள் " என்று கூறி மரத்தில் இருந்து கீழே தள்ளி விட்டிருந்தது.

அவைகளுக்கு தானியங்களை உணவாக கொடுத்துவிட்டு கிளம்பினான். அவை மிகுந்த மகிழ்ச்சியுடன் நன்றி கூறின. அதன் பின் காட்டைக் கடந்து அவன் வேறு ஒரு நாட்டுக்குள் நுழைந்தான்.

ஊரே கோலாகலமாக இருந்தது. அந்த நாட்டு இளவரசி தன் கணவனைத் தேர்ந்தெடுக்கும் சுயம்வரம் நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தாள். வேலைக்காரனுக்கு ஆசை, எப்படியும் இந்தப்போட்டியில் கலந்து கொண்டு நாம் இந்த நாட்டின் அரசனாக வேண்டும் என ஆசைப்பட்டான். போட்டியில் கலந்து கொண்டான். போட்டியில் வெற்றி பெறவில்லை என்றால் சிறையில் தள்ளிவிடுவார்கள்.

போட்டி ஆரம்பம் ஆனது. அவனை ஒரு குளத்திற்குக் கூட்டிப் போனார்கள். குளத்திற்குள் ஒரு மோதிரத்தை போட்டு அதனை எடுக்க வேண்டும் என கட்டளையிட்டார்கள் . அவன் பயந்து மலைத்து நின்றான். குளத்திற்குள் நீந்த ஆரம்பித்த அவனுக்கு ஆச்சரியம்....!"இதோ உங்கள் மோதிரம்" என்று ஒரு குரல் கேட்டது.

ஒரு மீன் தன் வாயில் மோதிரத்தைக் கவ்விக்கொண்டு வந்திருந்தது. அது அவன் புதரிலிருந்து காப்பாற்றிய மீன். இளவரசி அடுத்த போட்டி வைத்தாள். ஒரு மூட்டை அரிசி முழுவதும் தோட்டத்தில் கொட்டப்பட்டு விடிவதற்குள் ஒரு அரிசி விடாமல் சேகரிக்க வேண்டும். ஆகா இது நடக்கவே நடக்காது நமக்கு சிறை தான் என்று முடிவு செய்து அவன் தூங்கி விட்டான்.

அவன் உதவி இருந்த எறும்புகள் ஒவ்வொன்றாக பொருக்கி ஒரு மூட்டையில் வைத்திருந்தது. அதனால் அதிலும் வெற்றி பெற்று விட்டான். இறுதியான போட்டி ஒரு தங்க ஆப்பிள் காய்க்கும் மரம் காட்டில் இருக்கிறது- அதைக் கண்டுபிடித்து ஆப்பிளை எடுத்து வர வேண்டும். அவன் இருட்டும் வரை தேடினான் பசுமை மரங்கள் மட்டுமே இருந்தன. தங்க மரத்தைக் காணவே இல்லை.

கவலையுடன் இருட்டியபிறகு தூங்கிவிட்டான். காலையில் எழுந்து பார்க்கிறான் அவன் அருகில் தங்க ஆப்பிள் இருந்தது. அவனிடம் உதவி பெற்ற காகங்கள் அந்த ஆப்பிளைத் தேடிக் கொண்டு வந்து அவனிடம் போட்டிருந்தன.

அவன் அவைகளுக்கு நன்றி தெரிவித்தான். எல்லா போட்டியிலும் வெற்றி பெற்றதால் அவனை இளவரசி மணந்து கொண்டாள். அவன் ராஜாவாக அவளுடன் அந்த நாட்டை மகிழ்ச்சியுடன் வெகு நாள் ஆட்சி செய்தான்.

நாம் செய்த உதவி வீணாகாது. அது நமக்கு ஏதாவதொரு வகையில் எப்போதாவது பயன் தரும். நாம் யாரேனும் ஒருவருக்கு உதவி செய்துவிட்டு மறந்து விட்டாலும்கூட அது பின்னொருநாளில் நமக்கு யார் வாயிலாகவாவது கிடைக்கும். "செஞ்ச உதவியும் இட்டுவைத்த விதையும் வீணாகப்போகாது" மிக மிக அவசியமான நேரத்தில் செய்யப்படும் உதவி இந்த உலகை விட மிகப் பெரியது.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1768 - கப்டன் ஜேம்ஸ் குக் தனது கடற்பயணத்தை இங்கிலாந்தில் இருந்து ஆரம்பித்தான்.
- 1795 - திருகோணமலையின் பிரெடரிக் கோட்டையை ஸ்டுவேர்ட் தலைமையிலான பிரித்தானியப் படையினர் ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1914 - முதலாம் உலகப் போர்: ஜெர்மனியின் குடியேற்ற நாடான டோகோலாந்து பிரெஞ்சு மற்றும் பிரித்தானியர்களினால் முற்றுகைக்குள்ளானது.
- 1914 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனிப் படைகள் ரஷ்யாவை டனென்பேர்க் போரில் தோற்கடித்தன.
- 1920 - ஐக்கிய அமெரிக்காவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1942 - உக்ரைனில் சோட்கிவ் என்ற இடத்தில் நாசி ஜெர்மனியர் காலை 2.30 மணிக்கு யூதர்களை அவர்களின் வீடுகளில் இருந்து வெளியகற்றி குழந்தைகள், நோயாளிகள் உட்பட 500 பேரை கொன்று குவித்தனர்.
- 1957 - கண்டம் விட்டுக் கண்டம் பாயும் நீண்டதூர ஏவுகணையைத் தாம் சில நாட்களுக்கு முன் பரிசோதித்ததாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.
- 1972 - 22வது ஒலிம்பிக் போட்டிகள் ஜேர்மனி, மியூனிக்கில் ஆரம்பமானது.
- 1978 - முதலாவது அருளப்பர் சின்னப்பர் பாப்பரசராக பதவியேற்றார்.
- 1978 - முதலாவது ஜேர்மனிய விண்வெளி வீரர் சோயூஸ் விண்கலத்தில் விண்ணுக்குப் பயணமானார்.
- 1993 - யாழ்ப்பாணம், கிளாலியில் இரண்டு இலங்கைக் கடற்படைப் படகுகள் கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது.
- 1997 - அல்ஜீரியாவில் 60க்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2006 - திருகோணமலை மூதூர் கிழக்கில் சிறிலங்கா விமானங்கள் நடத்திய குண்டுவீச்சில் பொதுமக்கள் இருவர் பலியாகினர்.

### பிறப்புகள்

- 1728 - லாம்பர்ட், சுவிட்சர்லாந்து கணிதவியலாளர், இயற்பியலாளர், வானியலாளர் (இ. 1777)
- 1743 - அந்துவான் இலவாசியே, பிரெஞ்சு வேதியியலாளர், உயிரியலாளர் (இ. 1794)
- 1880 - கியோம் அப்போலினேர், இத்தாலிய-பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1918)
- 1882 - ஜேம்ஸ் பிராங்க், நோபல் பரிசு பெற்ற செருமானிய இயற்பியலாளர் (இ. 1964)
- 1883 - திரு. வி. கலியாணசுந்தரனார். தமிழறிஞர (இ. 1953)
- 1956 -மேனகா காந்தி, இந்திய அரசியல்வாதி
- 1980 - கிறிஸ் பைன், அமெரிக்க நடிகர்

### இறப்புகள்

- 1723- ஆன்டன் வான் லீவன்ஹூக், டச்சு உயிரியலாளர் (பி. 1632)
- 1865 - யோகான் பிரான்சு என்கே, செருமானிய வானியலாளர் (பி. 1791)
- 1951 - அபலா போஸ், வங்காள சமூக சேவகி (பி. 1864)
- 1969 -எஸ். எஸ். வாசன், திரைப்படத் தயாரிப்பாளர் (பி. 1904)
- 1995 - என். பி. அப்துல் ஜப்பார், சிறுகதை எழுத்தாளர் (பி. 1919)
- 2012 - ஈ. சரவணத்தமிழன், தனித்தமிழ் அறிஞர், நூலாசிரியர்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 200 | 100 | 160 | 140 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 85 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 230 | 250 | 300 | 300 | 280 |
| தக்காளி | 160 | 200 | 120 | 160 | 160 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 70 | 80 | 80 | 80 |
| கோவா | 80 | 120 | 80 | 120 | 100 | 120 | 120 |
| கரட் | 100 | 200 | 140 | 200 | 200 | 160 | 160 |
| பூசணி | 60 | 60 | 40 | 60 | 50 | 60 | 60 |
| புடோல் | 50 | 100 | 50 | 60 | 100 | 100 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 80 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 170 | 200 | 140 | 160 | 200 | 200 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 160 | 120 | 130 | 120 | 120 | 140 |
| பாகற்காய் | 150 | 250 | 150 | 200 | 200 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 40 | 100 | 70 | 50 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | 100 | 100 | 140 | 100 | 100 |
| பயற்றங்காய் | 80 | 60 | 40 | 100 | 60 | 100 | 120 |
| லீக்ஸ் | 100 | 120 | 70 | 120 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 50 | 60 | 40 | 60 | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 200 | 100 | 160 | 140 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 80 | 20 | 40 | 100 | 50 | 80 | 100 |
| போஞ்சி | 180 | 200 | 100 | 180 | 200 | 200 | 140 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 80 | 100 | 120 | 120 | 120 |
| கீரை - 1பிடி | 50 | 20 | 30 | 40 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 100 | 80 | 100 | 100 | 140 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50-60 | 70 | 70 | 65 | 50-70 | 60 |
| இராசவள்ளி | 200 | 300 | – | – | – | – | – |
| வெங்காயப்பூ | 200 | 200 | 150 | – | 140 | 200 | 260 |
| முள்ளங்கி | 50 | 100 | 30 | 80 | 60 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 30 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 100 | 50 | 80 | 60 | 80 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பரந்த உலகிலே எதுவுமே நிலையில்லை. நிலையாமையே ஒன்றே நிலைத்திருக்கிறது.
- புத்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாடகம் விடும் நேரம்தான் உச்ச காட்சி நடக்குதம்மா

பல வருடங்களுக்கு முன்னர் வாழ்வே மாயம் என்றொரு திரைப்படம் வெளிவந்திருந்தது. கமலஹாசன் அதன் கதாநாயகனாக நடித்திருந்தார்.

அந்தப் படத்தில், *வாழ்வே மாயம் இந்த வாழ்வே மாயம் தரை மீது காணும் யாவும் தண்ணீரில் போடும் கோலம் நிலைக்காதம்மா! யாரோடு யார் வந்தது. நாம் போகும் போது யாரோடு யார் செல்வது!...*

என்ற பாடல் வாழ்வின் சோகத்தை அற்புதமாகக் காட்டும்.

இந்தப் பாடலை இப்போது நினைக்கும் போதெல்லாம் இந்த நாட்டின் நல்லாட்சியை நினைக்கத் தூண்டும்.

நாட்டின் நல்லாட்சியும் தண்ணீரில் போடும் கோலம் போல நிலைக்காது என்பது உறுதியாயிற்று.

நாளுக்கு ஓர் அமைச்சராகப் பதவி நீக்கம் செய்யப்படுகிறது. இந்த அமைச்சரைப் பதவி நீக்கம் செய்யுங்கள் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குப் பரிந்துரை செய்ய, ஜனாதிபதி குறித்த அமைச்சருக்கு பதவி நீக்கம் செய்யப்பட்டதான கடிதத்தை அனுப்பி வைப்பார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக இந்த நாடகம் நடந்து கொண்டிருக்கும் போது, திடீரென திரை மூடி விலக, இன்னொரு காட்சி வருகிறது.

அதில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரத் தயாராகும் காட்சி வருகிறது. இதற்கு ஆதரவாகக் கையெழுத்துப் பெறும் நடவடிக்கைகள் முடக்கி விடப்பட்டுள்ளன.

ஆக, நல்லாட்சியின் மிக முக்கியமான கட்டம் இப்போது நடக்கிறது. அமைச்சர்கள் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் – பதவி நீக்கங்கள் என்பவற்றை அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனைப் பதவி நீக்கம் செய்யுமாறு ஜனாதிபதி, பிரதமர், முன்னாள் ஜனாதிபதி ஆகியோர் கூட்டாகத் தீர்மானித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பொதுவில் எதிர்க்கட்சித் தலைவர் மீதும் எதிர்க்கட்சித் தலைவர் சார்ந்த கட்சியினர் மீதும் ஆளுந்தரப்பு பாய்ந்தெழுவதும் அதற்கு ஈடாக எதிர்க்கட்சித் தலைமை ஆளுங்கட்சி மீது சீறிப் பாய்வதும்தான் வழமை.

ஆனால், இலங்கையின் சமகால ஆட்சியில் எதிர்க்கட்சித் தலைமையில் இருக்கக் கூடியவர் ஆளுங்கட்சியை எதிர்க்காத ஒரே தலைவராக இருப்பது ஆச்சரியமான உண்மை.

அதிலும் இன்னொரு அதிசயம். ஆளுங்கட்சிக்குள்ளேயே எதிர்க்கட்சி இருக்கும் போது எதிர்க்கட்சியாக இருக்கின்றவர்களை ஆளுங்கட்சியை ஆதரிப்பது என்பது எங்கும் நடக்காத அரசியல் புதுமை எனலாம். எதுஎவ்வாறாயினும் நல்லாட்சியின் சுவர்கள் இடிந்து விழத் தொடங்கிவிட்டன.

எதிர்வரும் டிசம்பர் மாதம் வரையேனும் என்னுடன் இருங்கள் என்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கோரிக்கைகூட நிறைவேறாதோ என்று எண்ணத் தோன்றுமளவில் நிலைமையுள்ளது.

ஆக, வாழ்வே மாயம் என்ற பாடலின் இறுதி வரிகள் பேசுவது போல,

*நாடகம் விடும் நேரம்தான் உச்ச காட்சி நடக்குதம்மா வேஷம் கலைக்கவும் ஓய்வு எடுக்கவும் வேலை நெருங்குதம்மா பாதைகள் பல மாறியே வந்த பயணம் முடியுதம்மா...*

என்பதாக நல்லாட்சியின் நிலைமையும் அமையலாம்.

# பிணைமுறி மோசடியாளர்களுக்கு எதிராக விரைவில் சு.கட்சி வழக்கு

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக இன்னும் சில நாட்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

இந்த மோசடி விவகாரம் கடந்த காலங்களில் நீதிமன்றம் வரை செல்லாதிருப்பதற்கு ஏதோவொரு சக்தி அதற்கு தடைகளை ஏற்படுத்தியதாகவே நினைப்பதாக சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும், சமூக நலன்புரி அமைச்சருமான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் அதற்காக விசாரணை நடத்த அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தமது விசாரணைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில் பேர்பெச்சுவல் டிரசரீஸ் நிறுவன உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ், முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட பலரும் இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ளதாக ஆணைக்குழு முன்பாக அளிக்கப்பட்ட வாக்குமூலம் ஊடாக புலப்படுகின்றது.

அத்துடன் ஆணைக்குழு விசாரணையின்போது வெளியான கையடக்கத் தொலைபேசி ஊடாக குறுந்தகவலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சம்பந்தப்பட்டுள்ளதாகவும், அவருக்கெதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் ஒன்றிணைந்த எதிரணி வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையில் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட சமூக நலன்புரி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க இந்த விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிட்டார்.

"அரசாங்கம் களவு செய்து கையும் மெய்யுமாக பிடிபட்டுக்கொண்டது. மத்திய வங்கி மோசடியில் அரசாங்கத்திற்கு பாரிய பிரச்சினையாகும். சுமார் 80 வழக்குகள் வரை காணப்படுகின்றன. இவை நீதிமன்றம் வரை கொண்டுசெல்ல முடியாதவாறு ஏதோவொரு சக்தியினால் தடைகள் ஏற்படுத்தப்பட்டன என்றே நாங்கள் நினைக்கின்றோம். எனினும் இந்த வழக்குகள் எதிர்காலத்தில் விசாரிக்கப்படும். அதனால் ஊழல், குற்றங்கள், மோசடிகள் தொடர்பில் சட்டத்திற்கு முன்பாக சம்பந்தப்பட்டவர்கள் சாட்சியமளிக்க நேரிடும். நாட்டின் ஜனநாயகம் மற்றும் மக்களின் சுதந்திரத்தை உறுதி செய்ய எதிர்காலத்திலாவது அப்படியான சூழ்நிலைக்குத் தள்ளப்படுவதை நிறுத்த நீதிமன்ற நடவடிக்கைக்குச் செல்வதே சிறந்ததாகும். இந்நிலையில் நீதிமன்ற நடவடிக்கைக்கு விரைவில் செல்வார்கள் என்றே நான் நினைக்கின்றேன். வழக்குகளும் தாக்கல் செய்யப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸ் - பொதுமக்கள் இடையே துன்னாலையில் இன்று சந்திப்பு

(கரணவாய்)

துன்னாலைப் பகுதி மக்களுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இன்று முற்பகல் 10 மணியளவில் கலிகைக்கந்தன் ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த ஜுலை மாதம் 9ஆம் திகதி சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த ஹண்டர் வாகனம் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்.

இதனையடுத்து ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டோர் கடற்படையினர் மீது தாக்குதல் மேற்கொண்டோரை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இதற்கு விசேட அதிரடிப் படையினரும் உதவிக்கு அழைக்கப்பட்டு சுற்றிவளைப்பு தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டது. இற்றைவரை 39 பேர் இது தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வன்முறைச் சம்பவங்கள், கடற்படையினர் மீதான தாக்குதல்கள், பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட கைதுகள் என்பன தொடர்பில் ஆராய்வதற்காக விசேட சந்திப்பு ஒன்று இடம் பெறவுள்ளது.

இச்சந்திப்பில்வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்னாண்டோ, யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலித்த பெர்னாண்டோ, காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் றஞ்சித் மாசிங்க, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி.கே.பிரியந்த, நெல்லியடி, பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரிகள், யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி தர்சன ஹெட்டியாராச்சி, 551ஆம் படைப் பிரிவின் கட்டளைத் தளபதி மற்றும் கடற்படை அதிகாரிகளும் கலந்துகொள்வர். (செ-60)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

பின்னாளில் ராவணன் சீதையைச் சிறை பிடித்துச் சென்றபோது அக்னி அவனை வழிமறித்தான். உண்மையான சீதையை இராமன் தன்வசம் ஒப்படைத்துப் போயிருக்கிறான் என இராவணனிடம் இச்சகமாகப் பேசித் தன்னுள் இருந்த வேதவதியை சீதையாக்கி அவனோடு அனுப்பி வைத்தான். சீதையை இராவணனிடமிருந்து பெற்றுத் தன்னுள் வைத்துப் போற்றிப் பாதுகாத்தான்.

இராமன், இராவணனை வென்றான். சீதையை சிறை மீட்டான். வழி வந்து சேராதிருக்கத் தன் வசம் இருந்த சீதையை இராமன் அக்னிப் பிரவேசம் செய்யச் சொன்னான். சீதை வடிவிலிருந்த வேதவதி திரும்பவும் தீப்புகுந்தாள்.

தீக்கொழுந்துகளுக்கிடையே இரண்டு சீதைகள் இருக்கக் கண்டு இராமன் ஆச்சரியமெய்தினான். என்ன நடந்ததென எடுத்துரைத்தான் அக்னி. தன் பொருட்டுச் சீதையாக மாறி அசோகவனத்துச் சிறையில் வேதவதி மேல் சீதைக்கு அபரிமிதமான அன்பு ஊற்றெடுத்தது. (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**இராகுகாலம், எம கண்டம், அமாவாசை, பிரதமை, சந்திராஷ்டமம் ஆகிய நாட்களில் பெண் ருதுவானால் என்ன செய்வது?**

அமாவாசை, பிரதமை, சந்திராஷ்டமம், எமகண்டம் இந்நாட்களில் பெண் ருதுவானால் விநாயகருக்கு எட்டு முக தீபம் ஏற்றி அறுகம்புல் மாலை சுற்றி வெல்லம் நிவேதனம் செய்து வரவும். இப்பரிகாரத்தை ருது ஆன நாள், கிழமை, இராகுகாலம் நேரம், எமகண்டம் நேரம், திதி இவற்றில் செய்யலாம். (தொடரும்)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ இந்தியாவின் எழுச்சி என்ற சக்கரம் மீண்டும் ஒருமுறை சுழல ஆரம்பித்துவிட்டது. மீண்டும் இந்தியாவிலிருந்து குரல் ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது. இந்தக் குரல் விரைவில் உலகின் எல்லாப் பகுதிகளிலும் கேட்டே ஆக வேண்டும்.

❖ நம்புங்கள்; உறுதியாக நம்புங்கள். இந்தியர் கண்விழித்து எழுந்திருக்கவேண்டும் என்று ஆண்டவனின் கட்டளை பிறந்துவிட்டது. இந்தியா எழுச்சி பெற்று முன்னேற்றப் பாதையில்தான் செல்ல வேண்டும் என்று இறைவன் ஆணை பிறப்பித்துவிட்டான். பாமரர்களான இந்தியாவின் ஏழை எளிய மக்கள் நல்வாழ்வு பெறப்போகிறார்கள்.

❖ மிருகபலத்தால் அல்லாமல் ஆன்மீக பலத்தால் மட்டுமே எழுச்சி பெறப்போகிறது. அழிவு முறையின் மூலமாக அதன் எழுச்சி உண்டாகப் போவதில்லை. மாறாக அமைதி, அன்பு ஆகிய முறைகளின் மூலமாகத்தான் இந்தப் பணி நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுக்குளாய் சக்திவேல் வி.க. மென்பந்தாட்ட போட்டி முடிவுகள்





கணன் கோம்ஸ் அனுசரணையில் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகம் நடத்தும் விளையாட்டு விழாவின் முதல் போட்டியாக மென்பந்தாட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வின் முதலாவது மென்பந்தாட்ட போட்டியானது உடுத்துறை செந்தமிழ் எதிர் ஆழியவளை அருணோதயா அணிகள்மோதின. இந்த போட்டியில் செந்தமிழ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவானது.

அடுத்த இரண்டாவது போட்டியில் தாளையடி சென். அன்ரனிஸ் அணியினை கேவில் வெள்ளி நிலா அணியினர் வீழ்த்தியுள்ளனர்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டிகளாக. குடத்தனை செல்வா வி.கழகத்தை எதிர் மருதங்கேணி கணேசானந்தா B வி.க மோதியது இதில் செல்வா வி.கழகத்தினர் எளிதாக வெற்றி பெற்றனர்.

அடுத்ததாக பிம்பொங்கை எதிர்த்து செந்தமிழ் மோதியது. இதில் பிம்பொங் அணியினர் வெற்றி பெற்றனர்.

அடுத்து காலிறுதி ஆட்டம். இதில் செல்வர் எதிர் கேவில் வெள்ளிநிலா மோதியது. இதில் செல்வா அணியினர் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்றனர்.

முதலாவது நடைபெற்ற அரையிறுதி போட்டியில் செல்வா அணியை எதிர்த்தாடிய பிம்பொங் அணியினர் 10 பந்து பரிமாற்றங்கள் நிறை வில் 85 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய செல்வா அணியினர் வெற்றியிலக்கை அடைந்து இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

அடுத்த B சுற்றின் முதலாவது போட்டியில் றம்போ அணியினரை எதிர்த்து செம்பியன்பற்று செம்பியன் வி.கழகம் மோதியது. இதில் வெற்றிலைக்கேணி றம்போ வி.கழகத்தினர் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகியுள்ளனர்.

B சுற்றின் இரண்டாவது போட்டியில் கேவில் வெள்ளி நிலா A அணியிரை எதிர்த்து குடத்தனை இளம்பிறை அணியினர் மோதினர். இதில் வெள்ளிநிலா அணியினர் இமாலய ஓட்டத்தை குவித்து இளம்பிறை அணியினரை வெற்றி கொண்டு அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர். (க)

# மகேசன் வி.கழகம் அரையிறுதிக்கு தெரிவு

அமரர் இ.அஜந் இன் முதலாம் ஆண்டு ஞாபகார்த்தமாக குரும்பை கட்டி உதயசூயன் வி.கழகத்தால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் துடுப்பாட்டசுற்றுப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில். வீனஸ் வி.க மற்றும் U.K வி.க.கால் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

நடைபெற்ற போட்டியில் மற்றைய கரவெட்டி மகேசன் வி.க சிறப்பாக விளையாடி அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

மகேசன் வி.க. முதலாவது போட்டியில் கொலிஸ் வி.கழகத்தையும் இரண்டாவது போட்டியில் வீனஸ் பீ வி.கழகத்தையும் மூன்றாவது போட்டியில் மைக்கல் வி.கழகத்தையும் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.(க)

# உருத்திரபுரம் விளையாட்டுக்கழக உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட கரைச்சி கால்பந்தாட்ட லீக்குக்கு உட்பட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.

இடம்பெற்ற ஆட்டத்தில் உழவர் ஒன்றியம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குறிஞ்சி விளையர்ட்டுக்கழக அணி மோதியது. இதில் உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் உதயதாரகை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுடரொளி விளையாட்டுக்கழக அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணியினரும் தலா 5 கோல்களைப் பதிவு செய்தமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இடம்பெற்ற மற்றைய ஆட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜெயந்தி நகர் விளையாட்டுக் க அணி மோதியது.

இதில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (க)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

மட்டுவில் .கண்ணகை சனசமூக நிலையத்தின் 61 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழ கம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான மாபெரும் மென்பந்து கிரிக்கெட்சுற்றுப்போட்டிக்குவிண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

போட்டியானது இன்று சனி மற்றும் நாளை ஞாயிறு தினங்களில் கண்ணகை விளையாட்டுக் கழக மைதானத்தில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு முன்பாக இடம்பெறவுள்ளது. அணிக்கு ஆறு வீரர்கள் ஐந்து ஓவர்கள் கொண்டதாக போட்டி நடை பெறும்.

போட்டித்தொடரில் வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் பணப்பரிசும் வழங்கப்படும் தொடர்புக் 077 780 6119. (க)

# திருமணம் முடித்த கையோடு போட்டியில் பங்கேற்ற வீரர்



கண்டி பல்லேகலயில் நேற்று முன்தினம் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வென்றிருந்தாலும் ஆட்ட நாயகன் விருதை வென்றது இலங்கை அணியின் மந்திர சுழற்பந்து வீச்சாளர் அகில தனஞ்சயதான். காரணம் முக்கியமான கட்டத்தில் சீரான இடைவெளியில் ரோஹித் ஷர்மாவில் ஆரம்பித்த விக்கெட், விராட் கோலி, ராகுல், பாண்டியா, யாதவ். அக்ஸர் பட்டேல் வரை நீண்டது.

இலங்கை - இந்திய அணிகள் மோதிய இரண்டாவது ஒருநாள் போட்டி கண்டி பல்லேகலயில் நேற்று முன்தினம்நடைபெற்றது. இந் தப் போட்டியில் இந்திய அணி 3 விக்கெட்டுக்கள் வித்தியாசதில் வெற்றிபெற் றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இப் போட்டியில் இலங்கை அணியின் அகில தனஞ்சய தனது மாயாஜால சுழற்பந்து வீச்சில் 6 விக்கெட்டுக்களை கைப்பற்றி ஒட்டுமொத்த கிரிக்கெட் ரசிகர்களையும் தன்பக்கம் திருப்பினார்.

ஒருபுறம் விக்கெட்டுகள் விழுந்தாலும் டோனியும், புவனேஷ்வர் குமாரும் போராட்டத்தை தொடர்ந்தனர். இந்த ஜோடி கடைசி வரை நிலைத்து நின்று விளையாடி இலக்கை எட்டியது. 45 ஆவது ஓவரில் இந்தியா 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இந்தப் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றாலும்கூட ஒட்டுமொத்த ரசிகர்களின் பார்வையும் இருந்தது அகில தனஞ்சய மீது தான். அனைவரும் அவரை கவலையுடன்தான் பார்த்தனர்.

காரணம் ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தி அதுவும் முக்கியமான துடுப்பாட்ட வீரர்களின் விக்கெட்டுக்களை வீழ்த்தியும் இலங்கை அணியால் வெற்றிபெற முடியாமல் போய்விட்டதே என்பது தான்.

இத்தனைக்கும் அகில தனஞ்சய புதன்கிழமை இரவு 11 மணியளவில் கண்டி வந்தடைந்துள்ளார். காரணம் காலையில்தான் அவருக்கு திருமணம் நடந்துள்ளது.

திருமணத்தன்றுதான் அவர் அணியில் இணைக்கப்பட்டுள்ளார் என்ற தகவல் கிடைத்துள்ளது. அதன்பிறகே அவர் உடனடியாக போட்டி நடைபெறும் கண்டி பல்லேகலக்கு வந்தடைந்துள் ளார்.

இந்தப் போட்டியில் இந்தியா வென்றிருந்தாலும் ஆட்டநாயகன் விருதை அகில தனஞ்சயதான் வென்றார். ஆட்டநாயகன் விருதை வாங்கிய பின் அவர் பேசுகையில்,

ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தியது மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் தோற்றுவிட்டோமே என்ற கவலை அதைவிடவும்இருக்கி றது.

வென்றிருந்தால் மகிழ்ச்சியாக சென்றிருப்பேன். புதன்கிழமை நான் திருமண பந்தத்தில் இணைந்தேன். திருமண வைபவம் முடிந்தவுடன் நான் போட்டியில் பங்கேற்க இங்கு வந்து சேர்ந்தேன் என்று சொல்லி முடித்தார் [illegible]. (க)

# மீண்டும் கரப்பந்தாட்ட சம்பியனாகியது இமையாணன் மத்திய விளையாட்டு கழகம்





இளம் பிறை வி.கழகம் நடத்திய நட்பு ரீதியிலான கரப்பந்தாட்ட போட்டியில்(24.08. 2017) அன்று நடைபெற்ற விறு விறுப்பான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் UK அணியை எதிர்த்து விளையாடிய இமையாணன் மத்தி 26:16 என்ற அடிப்படையில் வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல் ஆக்க...

மேற்கண்ட விடயத்தை தெரிவித்திருந்தார். இச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பாவது. இலங்கையில் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் பரவலாக காணாமல் போயிருந்தனர். குறிப்பாக நாட்டில் 20இலட்சம் தமிழ் மக்கள் உள்ள நிலையில் அவர்களில் 20ஆயிரம் தமிழ் மக்கள் 100க்கு ஒருவர் வீதம் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

இவற்றைவிட விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையிலான இறுதி கட்டப் போரில் 6000 தமிழ் மக்கள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டு சரணடைந்த நிலையில் அவர்களில் பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையிலேயே இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்கள் சார்பில் சர்வதேச கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நினைவு நாளில் தமிழ் மக்கள் வாழும் வடக்கு கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களில் பாரிய எழுச்சி கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளோம்.

இதன்பிரகாரம் எதிர்வரும் 30ஆம் திகதி வவுனியாவில் வடமாகாண அமைச்சர அனந்தி சசிதரன் ஓர் போராட்டத்தை நடத்துவதற்கு ஒருங்கிணைப்பதாக அறிவித்துள்ளார். இதேபோன்று நாம் அன்றைய தினமே காலை 8.30 தொடக்கம் 9.30 மணிவரை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் முன்பாக பாரிய எழுச்சி கவனயீர்ப்பு போராட்டமொன்றை நடத்தவுள்ளோம். அதன் பின்னர் பிற்பகல் 12 மணியிலிருந்து 1 மணிவரை முல்லைதீவு மாவட்ட செயலகம் முன்பாக மற்றுமொரு எழுச்சி போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

இதில் மக்களது பூரண ஒத்துழைப்பு கிடைக்குமானால் இறுதியாக பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்ட வட்டுவாகலில் இருந்து ஒரு கவனயீர்ப்பு பேரணியொன்றை மேற்கொண்டு முல்லைதீவு மாவட்ட செயலகம் வரை செல்வதற்கு ஆலோசித்து வருகின்றோம். இது தொடர்பாக மக்களிடம் பேசி வருகின்றோம். ஏனெனில் முல்லைதீவில் இம் மக்களிடம் படையினர் அச்சுறுத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார்கள். எனவே இது தொடர்பாக மக்களிடம் பேசிய பின்னரே இறுதி தீர்மானம் எடுக்கப்படும்.

இவற்றைவிட ஏனைய மாவட்டங்களிலும பிரதேசங்களிலும் அனைத்து மக்களும் இவ் கவனயீர்ப்பு எழுச்சி போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக தாய் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களினதும் தலைநகரங்களிலும் தமிழக மக்கள் ஒன்று கூடி இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க கவனயீர்ப்பு போராட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இதனூடாக இந்திய மத்திய அரசாங்கத்திற்கும் சர்வதேசத்திற்கும் ஆணித்தரமான ஒரு விடயத்தை எம்மால் தெரிவிக்கக்கூடியதாக இருக்கும்.

இதேபோன்று புலம்பெயர் நாடுகளிலும் பல கவனயீர்ப்பு போராட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிகின்றோம். இங்கு மேற்கொள்ளப்படவிருக்கும் இக் கவனயீர்ப்பு போராட்டத்திற்கு ஏதாவது தடைகளை ஏற்படுத்த அரசாங்கம் முயலுமாக இருந்தால் அது எமக்கு சாதகமாகவே அமையும் என்பதுடன் அவ்வாறு என்ன தடைகள் ஏற்பட்டாலும் யாழ்ப்பாணத்திலும் முல்லைதீவிலும் நாம் திட்டமிட்டவாறு இவ் எழுச்சி கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றே தீரும் என தெரிவித்துக் கொள்வதுடன் இதனை வெற்றியடைய செய்ய கட்சி பேதங்களை கடந்து அனைத்து தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என பகிரங்க அழைப்பினையும் விடுவதாக வட மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார். (செ-4)

## ஒரு வருடத்துக்குள்...

இலங்கை கடற்பரப்பில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்கள் மற்றும் கடத்தல் சம்பவங்களை ஒரு வருடத்துக்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவேன் என கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையின் 22ஆவது தளபதியாக பொறுப்பேற்றுள்ள வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா நேற்றுக் காலை அஸ்கிரிய, மல்வத்து பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசி பெற்றுள்ளார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், கடலோரப் பாதுகாப்புக்காக பல கப்பல்களை இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்யவுள்ளோம்.

இக்கப்பல்களைக் கொள்வனவு செய்வதன் நோக்கம் கடத்தல்களைக் கட்டுப்படுத்துவதற்கேயாகும்.

இன்னும் ஒரு வருடத்தை எமக்குத் தாருங்கள். கடல் வழியாக இடம்பெறும் அனைத்து சட்டவிரோத செயல்களையும் கட்டுப்படுத்த முடியும்.

அத்தோடு இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களுக்கு அவர்களது எல்லை தெரியாததாலேயே எல்லைமீறி மீன் பிடிக்கின்றார்கள்.

எனவே, அவர்களது கடல் எல்லையைச் சரியாக காண்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## சைட்டம் குறித்து...

த்தையொன்று இடம்பெற்றது.

இதில் சுகாதார அமைச்சர், சட்டமா அதிபர், மருத்துவ சபையின் பிரதிநிதிகள் மற்றும் உயர் கல்வி அமைச்சின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

பேச்சுவார்த்தையின் பின்னர், நாளை மறுதினம் திங்கட்கிழமை சைட்டம் தொடர்பில் தீர்மானமொன்று மேற்கொள்ளப்படவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்திருந்தார். (செ-11)

## இரும்பு என கருதி...

ரா.சுலோயினி (வயது 20) என்ற இருவருமே காயமடைந்தவர்களாவர்.

இனந்தெரியாத பொருள் ஒன்றைக் கண்டெடுத்து இரும்பு எனக் கருதி கோடரியால் பிளக்க முற்பட்ட போது அது வெடித்துள்ளது. இதனால் குடும்ப பெண்ணின் முகத்திலும் காலிலும் கையிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டு அவர் படுகாயமடைய நேரிட்டதுடன் அருகில் நின்ற அவரது மகளும் காயமடைந்தார்.

காயமடைந்த இருவரையும் முச்சக்கர வண்டியில் ஏற்றி பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அங்கு நோயாளர் காவு வண்டி இல்லாததன் காரணமாக மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் வாகனத்தில் ஏற்றி மிருசுவில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் இருவரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ-30,312)

## உதவி பொலிஸ்...

வர்களை தப்பிக்க வைப்பதாகவும், கீழ் அதிகாரிகளை கடமையின் போது அச்சுறுத்துவதும் கடமையை செய்யவிடாது தடுப்பதும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறார் என அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாகவும், கடந்த புதன்கிழமை, ஒரு அரசியல் கட்சியின் ஆதரவாளருடன் இணைந்து மதுபானம் அருந்தியதாகவும் இதனால் சக பொலிஸ் அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளானதாகவும் தலைமை பொலிஸ் பரிசோதகரிடம் முறையிட்டுள்ளனர்.

இவ்வாறு பல்வேறு இடையூறுகளை தொடர்ச்சியாக உயர் அதிகாரி மேற்கொண்டு வருவதால் தம்மால் கடமையை சரியாக செய்ய முடியாதுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரிடம் நேற்று முன்தினம் பாதிக்கப்பட்ட பொலிஸார் முறையிட்டுள்ளதுடன், நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர். பொலிஸ் நிலைய தகவல் புத்தகத்திலும் குறித்த விடயத்தை அவர்கள் பதிவு செய்துள்ளனர். (செ-9)

## நம்பிக்கையில்லாப்...

அமைச்சர் ரவி கருணநாயக்க

கூட்டு எதிர்க்கட்சி ராஜித சேனாரத்னவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவந்துள்ளது. எனினும் நாம் முழுமையான நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளோம். நாடாளுமன்றத்தில் இது கொண்டு வரப்படும் போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் அது தோற்கடிக்கப்படும் என நாம் உறுதியாக கூறுகின்றோம்.

தற்போதைய சூழலில் இது நகைப்பிற்குரிய நகைச்சுவையாக மாறியுள்ளது. நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்துள்ளமை எதிர்க்கட்சியின் வங்குரோந்து நிலையை இது எடுத்துக்காட்டுகின்றது. நம்பிக்கையில்லா பிரேரணை என்பது இறுதியான ஆயுதமாக இருக்க வேண்டும். எனினும் ஊழல்மிக்க எதிர்க்கட்சியினர் இதனையே முதலாவது ஆயுதமாக எடுக்கின்றனர் என அவர் தெரிவித்தார். (செ-11)

## பெண்களுக்கு...

நேற்று முன்தினம் வியாழக்கிழமை உள்ளூராட்சி சபை தேர்தல் சட்ட திருத்தத்தை நாடாளுமன்றத்தில் முன் வைத்தார். இந்த சட்டத்திருத்தம் விவாதிக்கப்பட்டு நேற்று வெள்ளிக்கிழமை வாக்கெடுப்புக்குப் பின்னர் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்கெனவே 25 வருடங்களுக்கும் மேலாக விகிதாசார ரீதியாகவே உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் தெரிவாகியிருந்தனர். அதற்கு முன்னதாக வட்டார ரீதியாக தெரிவு இருந்தது.

நிறைவேற்றப்பட்டுள்ள சட்டத்திருத்தத்தின்படி வட்டாரம் மற்றும் விகிதாசாரம் இரண்டையும் கொண்ட கலப்பு முறையில் தெரிவு இடம்பெறும் என தேசிய கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

வட்டார ரீதியாக 60 சதவீதமும் விகிதாசாரத்தில் 40 சதவீதமும் உறுப்பினர்களை தெரிவு செய்யும் வகையில் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் அவர் கூறுகிறார்.

கடந்த அரசாங்கத்தினால் 2012ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட திருத்தத்தில் 70 மற்றும் 30 என இந்த கலப்பு முறை இடம் பெற்றிருந்தாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் பெண்களுக்கு கிடைத்துள்ள 25 சதவீத இட ஒதுக்கீடு என்பது சபைகளில் 25 சதவீத பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதாக அமைவதாகவும் அவர் குறிப்பிட்டார். (செ-11)

## வாள்வெட்டு;...

யாவை சேர்ந்த 20 தொடக்கம் 28 வயதுடைய இளைஞர்கள் ஆறு பேரை நேற்று இரவு கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இச் சந்தேக நபர்கள் மீது பல முறைப்பாடுகள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் காணப்படுவதாகவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஒப்படைக்கவுள்ளதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (செ-250)

## காலம் இன்னும்...

போர்க் குற்றங்கள் உட்பட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான நீதிமன்றப் பொறிமுறையொன்றை அமைப்பதாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தின் போது வாக்குறுதி அளித்த மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கம் இதுவரை அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என குற்றம்சாட்டப்பட்டுவரும் நிலையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

கொழும்பிலுள்ள ஆங்கில ஊடகமொன்றுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ள பிரத்தியேக செவ்வியில், இறுதிக்கட்ட போரின் போது நிகழ்ந்ததாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் உட்பட மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கான நீதிமன்றப் பொறிமுறை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளித்துள்ள ஜனாதிபதி, சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய நீதிமன்றப் பொறிமுறையை முற்றாக நிராகரித்துள்ளதுடன் உள்நாட்டு நீதிமன்றப் பொறிமுறையை அமைப்பது தொடர்பில் கதைப்பதற்கும் இன்னமும் காலம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

போரின் போது இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அவசரமாக எதனையும் செய்ய முடியாது என்றும் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளக விசாரணைப் பொறிமுறை என்பதும் இன்னமும் முதிர்வடையாத விடயம் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யுத்தக் குற்றங்களை விசாரிப்பதற்கோ படையினரை தண்டிப்பதற்கோ தான் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆரம்பம் முதலே கூறி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-11)

# குடும்பஸ்தர் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

ஆட்டோ மற்றும் மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் வாளால் வெட்டியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 10.30 மணியளவில் அராலி அம்மன் கோவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான தெய்வேந்திரம் லோகேந்திரம் (வயது-28) என்பவரே வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-30)

# கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

வித்தியாவின் படுகொலை வழக்கை துரிதப்படுத்துமாறு கோரியும் அரசாங்கத்திற்கு எதிராக எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டம் கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் தலைமைக் காரியாலயத்திற்கு முன்னால் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் இதுவா நல்லாட்சி, நீதிபதி இளஞ்செழியனை சுட முயன்றவர்களை கைதுசெய் போன்ற சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் ஆர்ப்பாட்டக்காரர்களால் மகஜர் ஒன்றும் ஐ.நா.அலுவலக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

தேசிய மகளிர் வழக்கறிஞர்கள் முன்னணி குறித்த ஆர்ப்பாட்டத்தினை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## 20-ம் திருத்த...

திருந்தவர்களில் எவரும் இந்த சட்டமூலத்திற்கு எதிராக வாக்களிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

2012ஆம் ஆண்டு 22ஆம் இலக்க உள்ளூராட்சிகள் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்ததுடன் அதன் மீதான விவாதம் நேற்று நடத்தப்பட்டது.

விவாதத்திற்கு இறுதி நேரத்தில் சட்டமூலத்தில் காணப்படும் ஒரு சில பிரிவுகள் தொடர்பில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன்படி சமுர்த்தி அபிவிருத்தி உதவி மற்றும் கிராம சேவகர் போன்ற துறைகளில் இருப்போருக்கு தேர்தலில் போட்டியிட முடியாது என்று திருத்தச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தத்தை வாபஸ் பெறுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன யோசனையொன்றை சபைக்கு கொண்டு வந்தார்.

இதன் காரணமாக சபையில் குழப்பம் ஏற்பட்டதோடு சபை நடவடிக்கை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அதன் பின்னர் சபை மீண்டும் கூடிய போது குறித்த யோசனை மீது நாடாளுமன்றத்தில் இலத்திரனியல் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டதுடன் யோசனைக்கு எதிராக 117 வாக்குகளும் ஆதரவாக 43 வாக்குகளும் அளிக்கப்பட்டதால் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் இந்த யோசனை தோற்கடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளை நூலகம்

V2 TRAVELS
வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
VISA EXTENSION FOR FOREIGN PASSPORT (வீசா எக்ஸ்ரென்சன்)
0768227499
(C-9383)
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK - 550/= (C-9382)
கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப CANADA - 400/= மட்டுமே (நிபந்தனைக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## மஹா தேரர்குழு...

வணக்கத்துக்குரிய வரக்காக்கொட ஞானரத்ன மஹா தேரர் உள்ளிட்ட குழுவினர் நாளை மறுதினம் 28 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரவுள்ள இக்குழுவினர் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

உலக இளம் பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளில் விசேட விதமாக யாழ்.மாவட்டத்தில் உள்ள சர்வமத தலைவர்களுடனான சந்திப்பு ஒன்று எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் யாழ்.புத்தூர் மடிஹே பஞ்சசீஹ வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வும் வேறு பல தரப்புகளுடனான சந்திப்பும் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளுக்கான ஆயத்தங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை பாதுகாப்பு படைத்தரப்பினர் மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-9)

சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு
ஏ9 வீதிக்கு அண்மித்த யாழ்.கச்சேரிக்கு அருகாமையில் 8 அறைகள் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய 20 பரப்புக் காணியில் அமைந்துள்ள பெரிய வீடு வாடகைக்கு உண்டு. ஒரே நேரத்தில் பல வாகனங்களை நிறுத்தக்கூடிய வசதிகள் மற்றும் இணைந்த இரு குளியலறைகளுடன் பல பயன்தரு மரங்களுடன் கூடிய அமைதியான சூழல்.
மேலதிக விபரங்களுக்கு 0773353048 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (227)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
070 330 5500
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
(C-9407)
கனடாவுக்கு (Canada) மிகக் குறைந்த கட்டணத்தில் கப்பல் ஊடாக அனுப்பிடவும்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

## வாகன விபத்து;...

வவுனியா கனகராயன் குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் உள்ள குறிசுட்டகுளம் சந்திக்கருகில் யாழ்ப்பாணம்-கண்டி வீதியூடாக பயணித்த சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் மோதி நேற்று விபத்துக்குள்ளாகின.

இதன்போது துவிச்சக்கரவண்டியில் பயணித்த நபர் ஒருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் தூக்கி வீசப்பட்டனர். இதில் பலத்த காயங்களுக்குள்ளான துவிச்சக்கரவண்டியில் சென்ற நபா பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மேற்படி துவிச்சக்கரவண்டியில் பயணித்தவர் குறிசுட்டகுளத்தில் வசித்து வரும் இராசரத்தினம் பாலசிங்கம் (வயது 62) என அடையாளம் காணப்பட்டுள்ளார். விபத்துக் குறித்த விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

Computer Hardware & Networking
* PC Hardware & Troubleshooting
* PC Networking
New Batch start on 09.09.2017
2017 A/L 25% Discount
(C-9436)
ICS EDUCATION 77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம் 076-7013060 , 021-7306000

Mobile Phone Repairing Course
Smart & All Mobile Phones Hardware, Software and unlocking
15th Batch start on 09.09.2017
சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம். தனிப்பட்ட கவனிப்பு. சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.
*10 மாணவர்களுக்கான அனுமதி மட்டுமே உள்ளதால். ஆசன முன்பதிவு செய்யவும்.

CCTV TECHNICIAN COURSE
100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி
CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு
Approved Certificate
வேலைவாய்ப்பு உத்தரவாதம்*
20th Batch : 09-Sep-2017 (*Conditions Apply)
ICS EDUCATION 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். 021-7306000, 076-7013060

தேவை
திருநெல்வேலியிலுள்ள எமது கணக்கியல் நிறுவனத்துக்கு பின்வருவோர் தேவை.
01.கணனி கணக்கியல் பயிலுனர்
உயர்தரத்தில் வர்த்தகத்துறை மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.
02.பெண் வரவேற்பாளர்
தமிழ்தட்டச்சுதெரிந்திருத்தல்விரும்பத்தக்கது.
03.சமையல் வேலை தெரிந்த ஆண் தொழிலாளி (35வயதுக்கு உட்பட்டவர்)
தொடர்பு: 076 554 1472, 077 953 0496 (230)

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை நடுநாயகமூர்த்தி

(முன்னாள் போறூட் திட்ட இணைப்பாளர்)

யாழ். தொல்புரம் மேற்கு சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நடுநாயகமூர்த்தி அவர்கள் கடந்த (23.08.2017) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வியாளர் தம்பதியினரின் பாசமிகு மகனும், மாணிக்கம் - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும், நல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவசம்பு, வீரசிங்கம், திருமதி பூபாலதேவி செல்வரத்தினம், திருமதி அன்னலட்சுமி அருள்ராஜா, காலஞ்சென்ற சந்திரா மகாலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், புவனேந்திரம், காலஞ்சென்ற குலசிங்கம், சசீந்திரன், நவநீதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுதர்சனா (லண்டன்), பிரதீபன் (ஆசிரியர்- யா/சென்ஜோன்ஸ் கல்லூரி), றதீபன் (ஆசிரியர் - வ/கந்தபுரம் வாணி வித்தியாலயம்), தர்ஷதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாஸ்க்கரன் (லண்டன்), சிவதர்சினி, விஜயதர்ஜினி (ஆசிரியை- வ/பாவற்குளம் கணேசுவரா ம.வி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், டர்மிகன், பிரகதி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

தகவல் :
குடும்பத்தினர்

(228)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை [illegible] உள்ள அவர்களது அச்சகத்தில் 26.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org